Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 212 | ஞாயிற்றுக்கிழமை 26 ஜூன் 2022 | ஆனி 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

தென்னிலங்கை நிறுவனத்துக்கு திக்கம் வடிசாலை தாரைவார்ப்பு

விரிவு - பக். 02

## நாளை முதல் பாடசாலைக்கு பணிபுரியச் செல்லமாட்டோம்!

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

நாளை திங்கள் முதல் ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைகளுக்கு பணிபுரியச் செல்ல மாட்டார்கள் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

15 >

எத்தனை வாகனங்கள் இருந்தாலும்

## ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு எரிபொருள் அட்டையே

### அரசபணியாளர்களுக்கு விதிவிலக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 26

எத்தனை வாகனங்கள் வைத்திருந்தாலும் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு எரிபொருள் அட்டையேவழங்கப்படும். ஆனால் அரச பணியாளர்களுக்கு விதிவிலக்காக, அவர்களது திணைக்களத் தலை

15 >

# இந்த வாரம் முழுவதும் எரிபொருள் கிடையாது

## வரிசையில் நிற்கவேண்டாம் என்கிறார் அமைச்சர் காஞ்சன விஜயசேகர

கொழும்பு, ஜூன் 26

இந்த வாரம் வரவிருந்த எரிபொருள் கப்பல்களின் வருகை தாமதமாகியுள்ளது. அதனால் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாமென்று பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றேன். அடுத்த எரிபொருள் கப்பல் வரும் வரை பொதுப் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படும். எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன - இவ்வாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

15 >

எரிபொருள் விநியோகத் தடை

## யாழ். மாவட்டத்தில் பேக்கரி உற்பத்திகள் தடைப்படும்

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். மாவட்டத்தில் பேக்கரி உற்பத்திக்கும், விநியோகத்துக்கும் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இந்த வாரம் யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கும்

15 >

## மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கல்

### இப்படியும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

கொழும்பு, ஜூன் 26

மஹரகம, தெஹிவளை வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு அருகில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் நேற்று

15 >

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
ஒரு பவுண் - 22 கரட்டிற்கு
140,000/=
ஒரு வருட கால அவகாசம் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
இல.31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)
Tel: 021 221 7287, 076 636 1238
(CS 1125) (3/6)



ஒரு பவுணுக்கு
157,000 வரை
அதிகூடிய முற்பணம் தரும்
ஒரே இடம்
- தங்கப் பவுணுக்கு சந்தையில் அதிகூடிய முற்பணம்
- முதல் 10 நாட்களுக்கு வட்டி அறவிடப்படமாட்டாது
- ஒரு சில நிமிடங்களில் பணம் கையில்
- தங்க நகைகளுக்கான பூரண பாதுகாப்பு
011 2 400 400
SINGER FINANCE ரண்சஹனய

வருடத்திற்கு
உங்கள்
சேமிப்புக் கணக்கிற்கு அதியுயர் பிரதிபலனை எதிர்பார்க்கிறீர்களா?
10% வரை வட்டி (வ.வ.)
வழங்கும், செலான் Money Market சேமிப்புக் கணக்கு
செலான் வங்கி
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 200 88 88 அல்லது பிரவேசியுங்கள் www.seylan.lk
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்தார் இலங்கைத் தூதுவர்



கொழும்பு, ஜூன் 26
அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்துள்ளார்.
இந்தச் சந்திப்பு கடந்த 13ஆம் திகதியன்று வெள்ளை மாளிகையில் இடம்பெற்றுள்ளது.
பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கைக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வரும் நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது. இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எடுத்துக்கூறியுள்ளார்.
இதேவேளை - அமெரிக்காவின் திறைசேரியின் ஆசியாவுக்கான உதவி உப செயலர் றொபேர்ட் கப்ரோத், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி உப செயலரும், தூதுவருமான கெல்லி கெய்டெர்லிங் ஆகியோர் அடங்கிய குழுவினர் இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ளனர்.
(அ-ஒ-இ)

# தென்னிலங்கை நிறுவனத்துக்கு திக்கம் வடிசாலை தாரைவார்ப்பு

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பத்திராஜ மீது பொ.ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 26
திக்கம் வடிசாலையின் உரிமத்தைத் தங்களிடம் மீளவும் கையளிக்குமாறு அதைநிர்வகித்துவரும் வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள்நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். இவர்களைப் புறந்தள்ளி, இவர்களுக்கே தெரியாமல் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜ, திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கையைச் சேர்ந்த வி.ஏ .டிஸ்ரிலறிஸ் என்ற நிறுவனத்துக்கு 25 வருடக் குத்தகைக்குத் தாரை வார்த்துள்ளார். பேரினவாத எதேச்சாதிகாரப் போக்குடன் வடமராட்சி பனைத் தொழிலாளர்களின் வாழ்வுரிமையைத் தட்டிப்பறித்து தனது இனத்தவர்களிடம் திக்கம் வடிசாலையை அவர் கையளித்துள்ளார் என்று தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
பனை அபிவிருத்திச் சபையின் தலைவர்கள் அரசியல் நியமனம் என்பதால் அவர்களின்கீழ் இருந்து வந்த திக்கம் வடிசாலையின் வளங்களும் அரசியற் தேவைகளுக்கே பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது.
இதனாலேயே, திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடமிருந்து விடுவிக்க வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். பனை தமிழர்களின் தேசியவளம் என்பதால் இது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினையும் ஆகும். திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கை முதலாளிகளிடமிருந்து மீட்கவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜவின் பேரினவாத எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும் பனைசார் உற்பத்தித் தொழிலாளர்களின் பின்னால் தமிழர்களாகிய நாம் அனைவரும் அணிதிரண்டு போராடுவோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ஒ-இ)

# டொலர் கையிருப்பை பூச்சியமாக்கியது யார்?

## மோசடியாளர்களைக் கண்டறியவேண்டும் என்கிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜூன் 26
7, 8 பில்லியன் டொலர் என்ற மிகப்பெரிய கையிருப்பு எவ்வாறு பூச்சியமானது? மத்திய வங்கியிலிருந்த தங்கம் எவ்வாறு காணாமற்போனது? ஏன் இவை பொறுப்பற்ற முறையில் வீணாக்கப்பட்டன ? என்பது குறித்து எப்போதேனும் ஒரு நாளில் விசாரிக்கப்பட வேண்டும். அதனால்தான், மக்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள துன்பத்துக்கு ஒரு தீர்வு வரும் - இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு என்பது அரசியல் தலைவர்கள் அல்லர், மக்களாவர். மக்களுக்குத்தான் உதவி செய்யவேண்டும். அரசியல்வாதிகளுக்கு உதவி செய்வது பொய் வேலையாகும். ஏனெனில், பல ஆண்டுகளாக இந்த நாட்டின் வளங்களை வீணடிக்கும் செயல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. ஒரு தரப்பு அல்ல, பல தரப்பினர் இதில் தொடர்புபட்டுள்ளனர்.
இந்தப் பணத்தை வீணடித்தவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்.
இந்த முட்டாள்தனமான தீர்மானத்தை எடுத்தவர்கள் யாவர்? மக்களை சௌபாக்கியத்தை நோக்கி கொண்டு செல்லத்தான் தலைவர் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த வாக்குறுதிதான் வழங்கப்பட்டது. எனவே, 2, 3 ஆண்டுகளில் நாட்டை முழுமையாகக் கையேந்தும் நிலைக்குக்கொண்டு சென்றவர் யார் என்பது குறித்து முழுமையாக விசாரித்து, அவர்களிடமிருந்து அதிகாரத்தை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமாயின் உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்றார்.
(அ-ஒ-22)

# ஊடககற்கைத்துறைத் தலைவர் பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடககற்கைகள் துறைத் தலைவரும் மூத்த விரிவுரையாளருமான கலாநிதி சி.ரகுராம் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியுள்ளது.
பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சி. ரகுராமின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.
அவற்றின் அடிப்படையில், பல்கலைக்கழகப் பேரவையால் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் கலைப்பீடத்தின் மூத்த விரிவுரையாளருமான கலாநிதி சி.ரகுராம் ஊடகக் கற்கைகளின் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டார்.
(அ-ஒ-இ)

## தாக்கப்பட்ட இளைஞன் சாவு!

# முகாமையாளர் உட்பட 3 பேருக்கு விளக்கமறியல்


யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி (மணிக்கூட்டு) வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.
எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மற்றும் தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்திய இருவருமே இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
சம்பவத்தில் உடுவில் செபமாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞன் மீதான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றபோது, எரிபொருள் நிரப்பு நிலைய சி.சி.ரி.வி. பதிவு காணப்படவில்லை என விசாரணைகளில் தெரியவந்தது.
சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர்.
அவர்கள் மீது கொலை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் 'பி' அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர். அதனடிப்படையில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க மறுத்த மன்று ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணி ஊடாக சரணடைந்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் விசாரணைகளின் பின் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். முகாமையாளர் மீதும் கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனால் முகாமையாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான், அவரையும் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.
(அ-ஒ-26)

# தேசிய மக்கள் சக்தியின் மாநாடு நேற்று யாழில்!



யாழ்ப்பாணம், ஜூன் 26
தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட மாநாடு யாழ். நகரிலுள்ள ஞானம்ஸ் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.
தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 'சீரழிந்த தாயகத்தை கட்டியெழுப்புகின்ற தீர்வு' எனும் தலைப்பில் மாநாடு நடைபெற்றது.
இதில், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
(அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# உள்ளூராட்சித் தேர்தல்: 2023 மார்ச் மாதத்தில்!

**கொழும்பு, ஜுன் 26**

**ஒரு வருடகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிசபைத் தேர்தலை 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் குழுக் கூட்டத்தில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு தயாராகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார். கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்பட்ட தொகுதிவாரி முறையிலேயே எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை பஸில் ராஜபக்ச, தனது கட்சியை மறுசீரமைத்து எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெறத் திட்டங்களை வகுத்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14.இ)

# நெருக்கடி தீர்ந்தாலே தேர்தலை நடத்தலாம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 26

உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே தேர்தலை நடத்த முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:-

முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்படவேண்டும் அதன் பின்னரே தேர்தலை நடத்த முடியும். சில பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்ட பின்னர் மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

225 பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பும் உரிமையும் பொதுமக்களுக்கு உள்ளது. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல் தலைவர்களும் மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டும் - என்றார். (எ-இ)

# மைத்திரி – நிமால் சிறிபால டி சில்வா இரகசியச் சந்திப்பு

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இரகசியச் சந்திப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையை மீறி அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டதால் நிமால் சிறிபால டி சில்வாவை கட்சிப் பதவிகளில் இருந்து நீக்கவேண்டும் என்று எதிர்ப்புக்கள் வலுத்துவரும் பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின்போது நிமால் கட்சிப் பதவிகளில் இருந்து நீக்கப்படமாட்டார் என்று மைத்திரிபால சிறிசேன அவரிடம் தெரிவித்துள்ளார் என்றும் கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் அரசியல்வாதிகளுக்கு ஐ.எம்.எப். உதவும் அபாயம்!

## பிரிட்டன் இராஜதந்திரி எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 26**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியம், உதவிகள் தேவைப்படும் மக்களுக்குப் பதிலாக ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளுக்கு உதவுவதற்கான அபாயம் காணப்படுவதாக பிரிட்டனைச் சேர்ந்த பிரபல இராஜதந்திரியான மார்க் மெலோச்பிரவுன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கைப் பொருளியல் நிபுணர் நிஷான் டி மெல், 'இலங்கையில் இடம்பெற்றுவந்த திட்டமிடப்பட்ட ஊழல்மோசடிகள் தற்போதைய கடன் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணமாகும். இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர்மட்ட இணக்கப்பாட்டின் மூலம் இந்த நெருக்கடிக்குத் தீர்வு கிட்டுமா?' என்று தனது ருவிற்றர் பக்கத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவரின் பதிவை மேற்கோள்காட்டியே மார்க் மெலோச்பிரவுன் தனது ருவிற்றர் பக்கத்தில் மேற்குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

உதவிகளைத் திசை திருப்பிய வரலாறு இலங்கைக்கு உண்டு. எனவே இலங்கை ஏன் இத்தகைய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது என்பதற்கான காரணத்தை சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு இலங்கைக்கான தமது பயணத்தின்போது ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டும்.

இல்லாவிட்டால் சர்வதேச நாணய நிதியம், நெருக்கடிக்குள்ளாகி உதவி கள் தேவைப்படும் நிலையில் இருக்கும் மக்களுக்குப் பதிலாக, ஊழல்களில் ஈடுபடும் அரசியல் வாதிகளுக்கு உதவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என்று மேலும் தெரிவித்துள்ளார். (ம-14,இ)

# பொருளாதார நெருக்கடி நிலை அவசரகால நெருக்கடியாகலாம்

## ஐ.நா. மீண்டும் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 26

இலங்கை தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியானது, முழுவதுமான அவசரகால நெருக்கடியாக மாறக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுமார் 200 வகையான அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன், அடுத்துவரும் இரண்டு அல்லது மூன்று மாதகாலத்தில் மேலும் 163 வகையான அத்தியாவசிய மருந்துப்பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

அவற்றுக்கு மேலதிகமாக சிகிச்சைகளுக்கு மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசிய உணவுப்பொருள்கள், எரிபொருள் ஆகிய வற்றுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே இந்தப் பொருளாதார நெருக்கடி, முழுவதுமான அவசரகால நெருக்கடியாக மாறக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது என்று ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் எச்சரித்துள்ளது. (ம-14,இ)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 08 . 1985

மறைவு 13 . 07 . 2015

அமரர்

### திரு. தயாநிதி கஜேந்திரன் (இராஜா)

திதி : 26.06.2022

**ஆண்டுமன்மத ஆனிமாதத் திங்கள் அன்று**
**காண்தகு அமரபக்கத் திரியோதசிதிதி தன்னில்**
**கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம் எமை**
**மீளாத் துயரில் ஆழ்த்தி.**

ஆடிப்பாடி மழலைகள் செய்து திரிந்த
அன்பிற்கோர் இருப்பிடமாய் அமைதியின்
உருவமாய் எம்முடன் உறவாடிய விருட்சம்
மொட்டு ஒன்று விரியமுன் கருகி வீழ்ந்து
ஏழு ஆண்டுகள் சென்றதோ
ராஜா என்று அழைப்பதற்கு நீ இல்லையடா
நீயில்லா வெற்றிடங்கள் என்றும்
வெறுமை தான்டா ராசா
உன் நினைவுகளுடன் தலைமுறைகள்
தாண்டியும் காத்திருப்போம் உனக்காக
கண்ணிரண்டும் என்றும் நீர்த்திருப்பம்.

இந்திர பிரஸ்ஷம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

உன் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்.

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாசிலாமணி தேவநேரு

(கிராம சேவகர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.06.1949 | 28.06.1992 |

'அப்பா இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும்
போது தான் தெரியும் "அப்பான்றது" வார்த்தை
அல்ல அது வாழ்க்கையின் பாடம் என்று'

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்வி சாணை தவமணி



இன்னாவத்தை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாணை தவமணி (24.06.2022) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாணை பூரணம் தம்பதியரின் அருமை மகளும் தங்கராசா (காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சின்னத்துரை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் ராசம்மா ஆகியோரின் மைத்துனியும் சந்திரகலா, தயகலா, கிருஷ்ணராசா, சிவகலா, ரதிகலா, சுஜித் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சுகாதாரத்துறை முடங்க இடமளிக்காதீர்!

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஜூன் 26**

**சுகாதாரத் துறையினருக்கான எரிபொருள் விநியோகத்தை குழப்ப முனைவோரையும், கிளிநொச்சி மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தாக்கியவர்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவரால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாடு முழுவதும் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. மக்கள் அனைவருமே எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை நாங்கள் அவதானித்து வருகின்றோம்.

இந்த நேரத்தில் உயிர் காக்கும் மிக அதிஉயர் அத்தியாவசிய சேவையான சுகாதார சேவையில் பணியாற்றும் ஊழியர்கள், தமது கடமைகளை தொடர்ந்து மேற்கொண்டபடி எரிபொருளையும் தமது குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருள்களையும் பெற்றுக்கொள்வதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். இதனால் சுகாதாரசேவை படிப்படியாக முடங்கும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரத்தில் சுகாதார அமைச்சு சுகாதாரப் பணியாளர்களுக்காக விசேட ஏற்பாட்டின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு ஒழுங்குகளை செய்தது. சுகாதாரப் பணியாளர்களுக்கு என தெரிவுசெய்யப்பட்ட ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டும் இருந்து எரிபொருள் வழங்குவதற்காக செய்யப்பட்ட இந்த ஒழுங்கை, பல இடங்களில் பொதுநல நோக்கற்ற பொதுமக்களில் சிலர் தீவிரமாக எதிர்த்ததுடன் குழப்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே எரிபொருளை விநியோகிக்கக் கூடியதாக இருந்தமை மிகுந்த மன வருத்தத்துக்குரியது.

இவை அனைத்துக்கும் மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்காக அந்த மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ந.சரவணபவன் ஈடுபட்டிருந்தார். அப்போது சில பொதுமக்கள் அங்கு வரிசையில் காத்திருந்த தாதிய உத்தியோகத்தர்கள் சிலரை நகரவிடாமல் தடைகளை ஏற்படுத்தினர். மருத்துவ கலாநிதி சரவணபவன் அவர்களிடம் சென்று தாதிய உத்தியோகத்தர்களை முன்னோக்கி நகர அனுமதிக்குமாறு கேட்டபோது அதற்கு மறுத்து அவருடன் வாக்குவாதப்பட்டவர்களுள் ஒருவரால் அவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் வடமாகாணத்தின் சுகாதாரப் பணியாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நாகரிகமற்ற, மனிதாபிமானமற்ற, செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

துரதிர்ஷ்டவசமான இந்த நிலைமை நீடிக்குமானால் வடமாகாண சுகாதார சேவைகள் முடங்கும் நிலை ஏற்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது போகும். அப்போது மருத்துவமனைச் சேவைகளை முற்றாக வடமாகாண மக்கள் இழக்க வேண்டி ஏற்படலாம்.

அதனால் காப்பாற்றக்கூடிய பல அப்பாவிகளின் உயிர்கள் மட்டுமல்லாது இன்று குழப்பம் விளைவிப்பவர்களின் உயிர்கள் கூட பலியாக நேரிடலாம்.

சுகாதாரத்துறை மக்கள் அனைவரதும் உயிர்காக்கும் அத்தியாவசிய சேவை என்பதை புரிந்துகொண்டு எதிர்காலத்திலாவது சுகாதாரப் பணியாளர்கள் தடையின்றியும் தாமதமின்றியும் வேலைக்கு வருவதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் முன்னுரிமைச் சேவைகளுக்கு இடையூறு செய்யாது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றுள்ளது.

(ம-20)

## சுகாதாரத்துறையின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துக

### மன்னாரில் நேற்றுப் போராட்டம்

மன்னார், ஜூன் 26

சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனை ஊழியர்கள் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டம் நேற்றுக் முற்பகல் 10.30 மணி அளவில் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்றது. (ம-213)





## கிளி. சுகாதார சேவைகள் பணிப்பாளர் தாக்கப்பட்டதைக் கண்டித்து கவனவீர்ப்பு




கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந.சரவணபவன் மீது கிளிநொச்சி எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார ஊழியர்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ளவர்கள் மிக மோசமான வார்த்தைப் பயன்பாடுகளை மேற்கொள்கின்றனர், அவமதிக்கும் வகையில் நடந்துகொள்கின்றனர், மது போதையில் இருப்பவர்கள் தொழில் அடையாள அட்டையை பரிசோதிக்கின்றனனர். எனவே இவ்வாறான சம்பவங்களை நிறுத்த வேண்டும். அத்தோடு சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம், பின்னர் பேரணியாக மாவட்டச் செயலகம் வரை சென்றது. அங்கு மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் சுகாதாரத்துறையினர் மனுவொன்றைக் கையளித்தனர். (ம-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## என்ன செய்யப்போகின்றது அரசாங்கம்?

**நா**டெங்கும் பொருளாதாரம் நிலைகுலைந்திருக்கும் தருணத்தில், இப்போது இலங்கை எந்தப் பக்கம் நகர்வது என்று தெரியாது முட்டுச் சந்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றது. வெளிநாட்டுக் கடன்களால் முழிபிதுங்கி, நாள்களைக் கடத்திக் கொண்டிருந்த அரசாங்கம் இப்போது எந்தவழியும் தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு, எரிவாயுத் தட்டுப்பாடு என்ற வரிசையில் இப்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு ஒட்டுமொத்த நாட்டையே ஸ்தம்பிதமடைய வைத்திருக்கின்றது. எரிபொருள் தட்டுப்பாட்டின் தாக்கம் பெட்டிக்கடை முதல் பெரும் தொழிற்சாலைகள் வரை எதிரொலிக்கின்றது. அதைவிடவும் அரச துறைகளும், தனியார் துறைகளும் எரிபொருள் தட்டுப்பாட்டின் தாக்கத்தால், செயலிழக்கத் தொடங்கியுள்ளன. எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார இழப்புக்களின் தாக்கங்களும் இன்னும் பலமாக உணரப்படும்.

அரசாங்கமும், துறைசார் அமைச்சரும் எரிபொருள் கப்பல் இன்றுவரும், நாளை வரும் என்று கூறிக் கொண்டிருந்தாலும், எரிபொருள் கப்பல் எப்போது வரும் என்பது யாருக்கும் தெரியாது என்பதுதான் உண்மை நிலைவரம் என்கின்றன கொழும்புத் தகவல்கள். எரிபொருள் நெருக்கடி அடுத்த வாரத்தில் இன்னும் உச்சம் தொடும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இப்போதே நாட்டின் பல இடங்களில் மக்கள் பொறுமையிழந்திருக்கும் நிலையில், நெருக்கடி இன்னும் தீவிரமடைந்தால் ஏற்படப்போகும் நிலைமை நிச்சயம் பாரதூரமானதாகவே இருக்கப் போகின்றது.

நாட்டின் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டிருக்கும் நிலையில், இலங்கைக்கு இதுவரை உதவி செய்த நாடுகளும் இப்போது தயக்கம் காட்ட ஆரம்பித்திருகின்றன. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தப் பொறிமுறையையும் வகுக்காதிருக்கின்றமையே இதற்குக் காரணம் என்று தெரிகின்றது. நெருக்கடியில் இருக்கும் அரசாங்கத்துக்கு இது இன்னும் சிக்கலை ஏற்படுத்தப் போகின்றது.


இத்தனைக்கும் அப்பால், நெருக்கடி நிலைமையில் நிர்வாகத்தைக் கையாள்வதில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் பொருள்கள் மக்களுக்குச் சரியான முறையில் கிடைப்பதை உறுதி செய்ய அரசாங்கம் தவறியிருக்கின்றது. எரிபொருளாக இருக்கட்டும், எரிவாயுவாக இருக்கட்டும் கிடைப்பவற்றை மக்களுக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பொறிமுறையைக் கூடத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியாத அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமா என்பது மில்லியன் டொலர் கேள்வியே.

வெளிநாட்டு நிதி உதவிகள் அரசியல் ஸ்திரத்தன்மையில் தங்கியிருக்கும் நிலையில் இலங்கையில் அதற்கான சாத்தியக்கூறுகள் அறவே தென்படவில்லை. நாளுக்கு நாள் வரிசைகள் அதிகரிக்கும் நிலையில் கடும் நெருக்கடிகளுக்குள் சிக்கவிருக்கின்றனர் இலங்கை மக்கள். நெருக்கடிகள் தீவிரமாகிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நாட்டில் இப்போது மெல்ல மக்கள் மத்தியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றம் ஆரோக்கியமானதல்ல. எரிபொருள் வரிசைகளில் மக்களிடையே இப்போது ஆரம்பித்திருக்கும் மோதல் போக்கே இனிவரும் காலத்தில் அனைத்து வரிசைகளிலும் ஏற்படப் போகின்றது. ஒரு கட்டத்தில் மக்களை எவராலும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு, நாட்டின் சட்ட ஒழுங்கு கெடும் நிலைமை கூட விரைவில் ஏற்படக்கூடும்.அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் மக்கள், இனிமேல் தமக்குள் தாமே மோதி அழியும் அவலம் உருவாகலாம். அதற்கு முன்னதாக அரசாங்கமும், மாகாண, மாவட்ட நிர்வாகங்களும் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியதே மிக அவசரமானதும் அவசியமானதுமான காரியமாகும். இல்லையேல், இலங்கையின் கதி அதோகதி தான்!

நாளொரு நல்வார்த்தை

" உனக்கு உதவியோரை மறக்காதே; உன்னை நேசிப்பவரை வெறுக்காதே; உன்னை நம்பியவரை ஏமாற்றாதே"

**- அன்னை தெரேசா**



# ஊட்டச்சத்தின்மை மேலோங்குவதை வேடிக்கை பார்க்கின்றது அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ அதிருப்தி



**கொழும்பு, ஜூன் 26**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கான தீர்வு என்னவென அரசாங்கத்துக்கே தெரியவில்லை. அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய எந்த நாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படப் போகிறது என்பதுகூட அரசுக்குத் தெரியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயம் மற்றும் உணவு விநியோக சேவைத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் போகத்தில் அறுவடை முப்பது முதல் ஐம்பது சதவீதம் வரை குறைவடையவுள்ளது என நிபுணர்களால் கணிப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு பாரதூரமான விளைவை ஏற்படுத்தவுள்ளது. விவசாயம் பெருமளவில் வீழ்ச்சிகண்டுள்ளது.

அரசாங்கத்தில் உள்ள சிலரால், நாட்டுக்கு உரக்கப்பல் வரும் என்று சொல்லப்பட்டபோதிலும் இன்னமும் வரவில்லை. தற்போதைய உணவுப் பற்றாக்குறைக்கு அரசாங்கத்தின் தீர்வு என்னவென்பது அரசாங்கத்துக்குக் கூடத்தெரியவில்லை. நாட்டில் ஊட்டச்சத்தின்மை தலைவிரித்தாடுவதற்கு இடமளித்துவிட்டு அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்திடம் எந்தத் தீர்வுமில்லை - என்றார். (ச-இ)

# அரசாங்கத்துக்கெதிராக யாழில் துண்டுப்பிரசுரம்

கொடிகாமம், ஜூன் 26

பட்டினிச் சாவில் மக்களை தள்ளிய ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு எதிராக மக்களை அணிதிரளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினரால் நேற்றுமுன்தினம் யாழ். பேருந்து நிலையத்தில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

"அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பை நிறுத்து, எரிபொருள், எரிவாயுவை வரிசையின்றி பெற்றுக்கொடுக்க வழிசெய், மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய், பதுக்கல்களுக்கு இடமளிக்காதே, விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கு, பட்டினியால் மக்களை சாகடிக்காதே..." போன்ற வாசகங்கள் அடங்கிய துண்டுபிரசுரங்களே மக்களுக்கு வழங்கப்பட்டன. (சு-159)

நாளை 27.06.2022 திங்கட்கிழமை ஆனி 13

சுபநேரம் : 11.55 - 01.25
ராகுகாலம்: 07.25 - 08.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தேசிய மருத்துவமனையில் நோயாளர்களுக்கு உணவு மட்டுப்பாடு

**கொழும்பு, ஜூன் 26**

**கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு வழங்கப்படும் உணவு கடந்த 4 மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அகில இலங்கை சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிச் செயலாளர் ரேணுகா லியனகே தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஆயிரத்து 500 நோயாளிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு முன்னர் போஷாக்கான உணவு வழங்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடியால் தற்போது சோற்றுடன் இரண்டு கறிகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. மீனோ அல்லது முட்டையோ வழங்கப்படுவதில்லை. நீரிழிவு, சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோருக்கும் ஒழுங்கான முறையில் உணவு வழங்கப்படுவதில்லை. அனைத்து நோயாளிகளுக்கும் ஒரே மாதிரியான உணவே வழங்கப்படு கிறது. போஷாக்கான உணவு கிடைக்காமையால் நோயாளர்கள் பெரும் அபாய நிலைக்கு தள்ளப்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் எந்தவித தீர்வும் எட்டப்படவில்லை- என்றார். (ச-இ)

## மாணவர்களுக்கு உணவுப்பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கோப்பாய் கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 90 மாணவர்களின் மதிய உணவுக்காக அரிசி, பருப்பு, தூள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

கனடாவைச் சேர்ந்த துரைராஜா சரஸ்வதி என்பவரின் பிறந்தநாளை முன்னிட்டு, பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் ஊடாக மேற்படி உதவிகள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (ம-14)



முல்லைத்தீவு அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட ஏழு திறன் வகுப்பறைகளும் பாடசாலைக்கான மதிலும் நேற்றுமுன்தினம் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதய குமாரால் திறந்து வைக்கப்பட்டன. (ஒ-14,9)

## பயனாளிகளுக்கு மரக்கறி நாற்றுகள்

சாவகச்சேரி ஜூன் 26

சாவகச்சேரி நகர மற்றும் கல்வயல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தால் தக்காளி மற்றும் கத்தரி நாற்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த அமைப்பினர் விவசாயத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக, விவசாயத்தை மேற்கொள்ளும் 25 குடும்பங்களுக்கு பயிர்வளர்ப்பு பிளாஸ்ரிக் பைகளையும் வழங்கியுள்ளனர். (ய-9)



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு முன்னால் எரிபொருளைப் பெறுவதற்காக வெயிலில் காத்திருந்த மக்களுக்கு, நபரொருவர் குளிர்பானம் வழங்கினார். (ஒ-17-14,20)



## பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொக்குவில் ஸ்தான சி.சி. தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் நலிவுற்ற 105 மாணவர்களுக்கு ஒரு மாதத்துக்குரிய சத்து உணவு வழங்கப்பட்டது.

பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான தலைவர், நா.தனேந்திரன், செயலாளர் என்.விந்தன் கனகரட்ணம், ஆலோசகர் இ.மயில்வாகனம் ஆகியோர் இணைந்து பாடசாலை அதிபர் திருமதி பி.சண்முகராஜா மற்றும் ஆசிரியர் திருமதி தயாநிதி தர்மரத்தினம் ஆகியோரிடம் 80 ஆயிரம் ரூபாவை நேற்றுமுன்தினம் வழங்கி வைத்ததுடன் மாணவர்களுக்கான சத்து உணவுத் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

அரசால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சத்து உணவுத் திட்டத்துக்கான நிதிக் கொடுப்பனவுகள் கடந்த ஐந்து மாதங்களாக அரசால் நிறுத்தப்பட்ட நிலையில், பொருண்மியம் நலிந்த குடும்பங்களின் பிள்ளைகள் வீட்டில் காலை உணவை உண்ண வசதி இல்லாமல் பாடசாலையால் வழங்கப்படும் உணவையே நம்பி வருகின்றனர். இதனால் குறித்த பாடசாலைக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. (ய-20)



பொருளாதார நெருக்கடி காரணமாக, நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இராசாமடு, மடுக்கரை கிராமங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு பொருண்மியம் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் மன்னார் றோட்டரி கழகத்தால் அண்மையில் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை அவுஸ்திரேலிய சேவை அமைப்புக்கள், றோட்டறிக் கழக நண்பர்கள் வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-213)

## ஆஸி. செல்ல முயன்ற 35 பேர் பாணந்துறை கடற்பரப்பில் கைது

கொழும்பு, ஜூன் 26

அவுஸ்திரேலியாவுக்கு படகுமூலம் சட்டவிரோதமாக செல்ல முயன்ற 35 பேரை பாணந்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்துள்ளனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் கடற்படையினர் மேற்கொண்ட றோந்துப் பணியின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் பயணித்த இழுவைப்படகையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது 25 ஆண்கள், 4 பெண்கள் உட்பட 6 சிறுவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கல்பிட்டி மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)



சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் ஏற்பாட்டில், பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த 25 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் பருத்தித்துறை பரமானந்தா சிறுவர் இல்லத்தில் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சத்தை எதிர்கொள்ள வயற்காணி தாருங்கள்!

## ஆறுமுகத்தான்குளம் கிராம மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 26**
**முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு வயற்காணியைப் பெற்றுத்தர முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் 110க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 35 ஆண்டுகளுக்கும் மேலாக வயல் நிலம் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றன.
நாட்டில் ஏற்பட்ட கொரோனாவால் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியிலும் நாம் கடும் பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளோம்.
நாட்டின் பொருளாதார நெருக்கடியால் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள எமக்கு வயற்காணியைப் பெற்றுத் தந்தால் எமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த அது உதவியாக இருக்கும்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகம் ஆகியவற்றில் இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அதிகாரிகள் அசமந்தப் போக்காகவே செயற்படுகின்றனர்.
எனவே இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கவனத்திலெடுத்து எமது அன்றாட வாழ்வாதாரத்துக்காக வயற்காணியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-13)

## மரக்கடத்தலில் ஈடுபட்டவருக்கு நீதிமன்று 24,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் பகுதியில், சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்டவருக்கு 24 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பிட்டுள்ளது சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
சாவகச்சேரி, வேம்பிராய் பகுதியில் சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்திச் செல்வதாக யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் சிறப்புச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதனையடுத்து மரக்குற்றிகளுடன் சென்ற வாகனத்தைச் சோதனைக்குட்படுத்திய நிலையில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகள் கடத்தப்பட்டமை கண்டறியப்பட்டது. இதையடுத்து அவற்றைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 46 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவருக்கு 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவர் கடத்தியதாகச் சொல்லப்படும் மரக்குற்றிகள் அரசுடமையாக்கப்பட்டன. (ம-125)

## கால்நடைத் தீவன உற்பத்திக்கு அரிசி, நெல் பயன்படுத்தத் தடை

கொழும்பு, ஜூன் 26
நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் தொடராக இன்று முதல் நடைமுறையாகும் வகையில் கால்நடைத் தீவன உற்பத்திக்காக அரிசி அல்லது நெல்லை விற்பனை செய்வதோ அல்லது பயன்படுத்துவதோ தடை செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
மேற்குறித்த விடயம் தொடர்பாக சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது. (ய)

## 10 அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 26
திறந்த கணக்குகள் மூலம் 10 அத்தியாவசியப் பொருளகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட 10 அத்தியாவசிய பொருள்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுவதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம)



## வவுனியாவில் விபத்து மூவருக்குக் காயம்!

வவுனியா, ஜூன் 26
வவுனியா, பறனட்டகல் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த ஜீப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.
வாகனச் சாரதி உட்பட மூவரே படுகாயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-110)

## மறுவாழ்வு முகாமிலிருந்து தப்பியவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 26
வெலிகந்தை - கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பிச் சென்ற ஒருவர், மகாவலி கங்கையின் கிளை ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த 19 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இந்த இளைஞன் மற்றுமொரு நபருடன் கடந்த 22ஆம் திகதி கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். இவர்களில் ஒருவர் அன்றைய தினமே பிடிப்பட்டுள்ளார். இந்த நிலையில் இளைஞன் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் பொலநறுவை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெலிகந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொரோனா காலத்தில் இந்த முகாம் கொரோனா நோயாளிகளுக்கான தனிமைப்படுத்தல் நிலையமாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இரண்டு உணவுக் களஞ்சியங்கள் கிளிநொச்சியில் நேற்று முற்றுகை

கிளிநொச்சி, ஜூன் 26
சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றாமல் உணவுகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இரண்டு உணவுக் களஞ்சியங்கள் கிளிநொச்சியில் முற்றுகையிடப்பட்டுள்ளன.
கிளிநொச்சி நகர்ப்பகுதியிலேயே சுகாதாரப் பரிசோதகர்களால் இந்த உணவுக் களஞ்சியங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.
குறித்த களஞ்சியத்துக்குள் இனங்காணப்பட்ட சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் அவர்கள் மேலதிக விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம)



கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் மற்றும் ஜெற் லைனேர்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் 51ஆவது ஆண்டு விழாவில் நேற்று உள்ளூர் மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது. (ச-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

# JOB DESCRIPTION – PROGRAMME SUPPORT OFFICER THE HALO TRUST - SRI LANKA

The HALO Trust is a non-political, non-religious NGO, registered in Britain as a charity (no.1001813 and SCO37870) and in the United States as a 501(c)(3) Not-for-Profit organisation. HALO specialises in the removal of the debris of war and employs almost 10,000 staff in 28 countries. All programmes are supported by a headquarters in the UK.

HALO began operations in Sri Lanka in 2002, undertaking an extensive minefield survey. This survey provided much of the baseline minefield data now held in the national database and was the basis for the decision for HALO to set-up a large humanitarian mine clearance programme. Currently, HALO Sri Lanka employs over 1,300 local staff, who work as skilled survey/Explosive Ordnance Disposal (EOD) teams, alongside manual and mechanical mine clearance staff, and support staff. HALO's operations are focussed in the Jaffna, Kilinochchi and Mullaitivu Districts. With seven international donors, HALO Sri Lanka is seeking a motivated and committed individual who can support with the Programme's monitoring and evaluation of project results, and donor reporting requirements.

**Duties and responsibilities:**

The Programme Support Officer will work under the supervision of the Programme Officer and Programme Manager and will support HALO's activities in Sri Lanka with a particular focus on donor management, monitoring & evaluation and project coordination.

In your day-to-day role you will support the monitoring and evaluation of the impact of HALO's work in Sri Lanka through a variety of activities. You will provide essential support in managing the complexities of donor contracts through the preparation of project reports, proposals, case studies and other project documentation as per our donor's requirements. Furthermore, you will provide much needed general administrative and project support for the running of the wider Programme as required. You will regularly liaise with other departments, including GIS & Survey, Operations, Finance and the Community Liaison Officer.

**Experience & qualifications**

The desired candidate will be able to demonstrate an understanding of the international humanitarian and development sector, in particular, in Sri Lanka and South East Asia. Furthermore, you will possess:

- Minimum Bachelors level degree in a relevant field (social sciences, International Relations, Development or similar).
- Minimum of two years of relevant experience working with an (I)NGO, UN Agency or Embassy.
- Experience with producing high quality texts and materials, in particular for donor report and proposal writing purposes.
- Experience with project monitoring & evaluation in the international aid and development sector.
- Knowledge of, and experience with development organizations and/or projects in the Northern Province of Sri Lanka would be an advantage.

**Skills & Knowledge:**

- Excellent IT and numeracy skills (MS Office), proficient in the use of databases and Excel (experience using Excel for data collection and analysis are essential).
- Strong written and verbal communication skills.
- Good organizational skills with the ability to manage multiple deadlines simultaneously.
- Ability to draft communication materials for different audiences, including presentations and case studies.
- Knowledge of social sciences research methods will be an added advantage.
- Knowledge of the international humanitarian development arena
- Experience with GIS desirable though not essential.

**Language skills**

- Fluency in written and spoken English is essential
- Good command of spoken and written Tamil would be considered an advantage

Furthermore, the selected candidate should be able to legally work in Sri Lanka. Candidates who currently reside in the Northern Province, are prepared to relocate or have the ability to regularly commute to HALO's main office in Kilinochchi are preferred.

Interested candidates must submit their CV and a cover letter to the below address or e-mail. In addition, please provide details of a minimum of two references. A reference check will be part of the selection process.

All applications must be submitted no later than **Friday 22 July 2022**. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் அருளாசியுரையும் வேத பாராயண நிகழ்வும் நாளை திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப் பாணம் சித்தங்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத் தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்ரீ ச.மதுசூதனக்குருக் கள் அருளாசி உரையும் வேதபா ராயணத்தையும் நிகழ்த்தவுள் ளார் (ச)

## விற்பனைக்கு

தகரக் கொட்டகை மரத்தளபாடங்களுடன் விற்பனைக்கு (12 அடி அகலம் 60 அடி நீளம்)

077 345 0039, 077 348 0039

## அறையொன்று வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் ஒரு அறை இணைந்த குளியலறை வசதியுடன் வாடகைக்குத் தேவை. யாழ்ப்பாண நகரில் / வண்ணார்பண்ணை சிவன் கோவில் அடி / K.K.S வீதி அண்மித்த பகுதிகளில் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 076 736 7181

## விற்பனைக்குண்டு

எம்மிடம் முட்டை இடும் கோழிகளுக்கான தீவனம் விற்பனைக்குண்டு

விலை - 50 Kg மூடை 10,000/-

077 881 4994 நீர்வேலி

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்ப நல்ல சுபாவ முடைய முயற்சியுள்ள வசீகரமான 1984 இல் பிறந்த ரோகினி (8இல் செவ்வாய்) Electrician/Plumber தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 399) (3/6)

தொடர்புகளுக்கு 077 198 5276

## திருமண சேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 79 அச்சுவினி, 78 பூசம், 91 மகம், 91 விசாகம், 85 பூரட்டாதி, 85 கார்த்திகை சூரியன் செவ்வாய் 87 RC கௌரவ குடும்பம் PR உள்ள மணமகன்மாருக்கு உள்நாடு வெளிநாட்டிலும், 96 ரோகிணி, 94 பூரட்டாதி, 90 சதயம், 86 அத்தம் Divorce, வதிவிட வசதியுள்ள மணமகள்மாருக்கு வெளிநாட்டிலும் மணமக்கள் தேவை.

தொடர்பு

0044 7424092585
Whatsup / Viber

## வேலையாள்கள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலைசெய்ய ஆண். பெண் வேலையாள்கள் தேவை. ஆண்கள் தோட்ட வேலையும். பெண்கள் சமையல் வேலையும் வயதில் மூத்த கணவன் மனைவியர் விரும்பத்தக்கது

சம்பளம் 30.000 - 50.000வரை வழங்கப்படும்

யாழ்ப்பாணம் 077 375 3503

## வீடு விற்பனைக்கு

கொட்டாஞ்சேனை அல்விஸ் பிளேஸில் 34 பேர்ச்சஸ். இருமாடி கொண்ட வீடு 08 படுக்கை அறை கள், 05 குளியலறைகள் மற்றும் தனியான அனெக்ஸ் (02 படுக்கை அறைகள், வரவேற்பறை, சமையல் அறை மற்றும் குளியல் அறை) கொண்ட வீடு விற்பனைக்கு. உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு:077 0068 073

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். கைலாச பிள்ளையார் கோவில டியில் ஒரு அறை சிறிய கோல், குசினி யுடன் தனி வீடு. படிக்கும் சூழலில் உள்ளது. ஆசிரியைகள், மாணவிகள், விரும்பத்தக்கது. (CS19803) (3/6)

தொடர்பு : 077 408 1751

## திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள் விரைவாக நிறைவேற்றி கொடுக்கப்படும். (CS 44967) (3/6)

தொடர்பு : 077 078 3832

## வீடு வாடகைக்குத் தேவை

மருதனார் மடம், உடுவில், மானிப்பாய், கொக்குவில் ஆகிய ஏதேனும் பகுதியில் இரண்டு மாதங்களுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

3 அல்லது 5 அறைகள் உள்ளதாக வேண்டும்.

Attached Bathroom வசதி வேண்டும்.

077 087 0883

## வேலைவாய்ப்பு

அலுவலக வேலைகள் மற்றும் வங்கி சம்பந்தமான வேலைகள் உண்டு.

தொடர்புகளுக்கு:-

076 684 9572, 076 674 3807

## French Class

FRENCH வகுப்பு On-Line (Zoom) மூலம் போதிய கற்கை நெறிகள் வழங்கப்படும் சான்றிதழும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

077 4291587, 077 072 3584

## மணமகன் தேவை

1994 இல் பிறந்த. மகம் நட்சத்திரம். யாழ். இந்து கௌரவ குடும்ப ஜேர்மனியில் வசிக்கும் Doctor ஆக பணிபுரியும் மணமகளுக்கு ஜேர்மன். உள் நாட்டு மணமகன் (Doctor) தேவை (CS 45302)(3/6)

077 314 8249, 021 225 6070

## வீடு வாடகைக்கு

படிக்கும் மாணவர்கள், அரச தனியார் உத்தியோ கத்தர்கள் விரும்பத்தக்கது. (விடுதியாகவும் பயன் படுத்தலாம். K.K.S. றோட்டில் கடை வாடகைக்கு உண்டு. களஞ்சிய சாலையாகவும் பயன்படுத்தலாம்.

077 345 0039, 077 348 0039

## வேலையாள் தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள வீடொன்றில் தங்கி நின்று பெண் நபரொருவருக்கு மட்டும் சமைத்து கொடுக்கக்கூடிய பெண் வேலையாள் தேவை.

076 567 4930

## மணமகள் தேவை

வயது 42 கிறிஸ்தவம் லண்டன் சிற்றிசன் வேறு தீய பழக்கவழக்கங்கள் அற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படம், தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

கீழ்காணும் Email இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும். (cs 4686) (2/6)

Samsonnicolas42@yahoo.com

## சொர்க்கம் திருமண சேவை

1993 இல் பிறந்த பூர நட்சத்திர கனடாவில் வசிக்கும் ஆணுக்கு உள்நாட்டு அழகான படித்த பெண் தேவை.

1984 இல் பிறந்த உத்தராட நட்சத்திர லண்டனில் வசிக்கும் பெண்ணிற்கு உள்நாட்டு படித்த ஆண் தேவை.

தொடர்பு கொள்ள:-
சொர்க்கம் திருமண சேவை

001 4166661855, 077 8876969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைமுகப்படுத்தல் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தால் நடத்தப்படும் நுண்நிதி டிப்ளோமா கற்கை நெறியின் ஐந்தாம் அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை, முற்பகல் 9.30 மணிக்கு, கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில், பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. ஒரு வருடக் கற்கைநெறியான இந்தக் கற்கைநெறியில் வங்கித்துறையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் என ஏறத்தாழ 100 க்கும் மேற்பட்டோர் பூர்த்தி செய்து உள்ளனர். நுண்நிதி துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இக் கற்கைநெறி ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் நுண்நிதி பற்றிய அறிவைப் பெற்று கொள்வதோடு, இத்துறையில் வேலை செய்யும் உத்தியோகத்தினரின் பதவி உயர்வுக்கும் ஒரு படிக்கல்லாக அமையும் என்பது சிறப்பம்சம். (ஒ-இ)

**உங்கள் தேவைக்கான தேடல்**

ஒவ்வொரு விடியலும் உங்களின் அடுத்த
வெற்றிக்காகத்தான் விடிகிறது.
இன்றே தொடங்கு உங்கள் கனவை நினைவாக்க!
உலகின் எங்கோ ஒரு மூலையில்
உங்கள் கேள்விக்கான பதில் கிடைக்கும்.

**Try**
**www.youtooda.com**
**USE OUR WEB PLATFORM FREE**
முயல்வோம் முடியும்வரை
வாழ்வோம் <..... (நன்றாக) .....> வாழவைப்பேம்
**www.youtooda.com Team**

**கென்சில்டன் சர்வதேச பயண ஒழுங்கமைப்பு நிறுவனத்தின் சுற்றுலாப் பயணம்**

**Package Includes**
பாரிஸ் மற்றும் மிலான் நகரங்களில் பிரசித்தி வாய்ந்த இடங்களை பார்வையிடல். போக்குவரத்து மற்றும் சுற்றுலா வழிகாட்டி தங்குமிட வசதி மற்றும் உணவு
**Departure 9th September 2022**
Europe, Visa, Asian visa, Visa Consulations Documention, Bank Balance Statements Facilities and Airtickets செய்து தரப்படும்.

**Contact No : 280 9403, 077 575 8100
075 405 1848, 075 225 2320**
(CR36239) (3/6)

# இலங்கையில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை (SGBV) நிவர்த்தி செய்வதற்கான சேவைகளின் வரைபடம் - விழுது

## மாவட்ட ஆய்வாளரின் பாத்திரத்திற்கான குறிப்பு விதிமுறைகள் - நான்கு பதவிகள் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, புத்தளம்)

இந்த ஆய்வு முடிவு அரச சேவை வழங்குனர்களுக்கும், சிவில் சமூகத்தின் தங்கள் மற்றும் சேவையை செயல்படுத்துவதற்கும் பயனுள்ளதாக இருக்கும். கற்றுக்கொண்ட பாடங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பயனுள்ள சேவை வழங்கல் ஆகியவற்றின் விரிவாக்கம், தழுவல் அல்லது ஏற்றுக்கொள்தல் ஆகியவை SGBV சேவையை மேம்படுத்துவதற்காக வலியுறுத்தும் நோக்கத்துடன் சிறப்பிக்கப்படும். இறுதி அறிக்கையில் பல பங்குதாரர்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கி இருக்கும்.

### திட்ட நோக்கங்கள்

- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான SGBV சேவை வழங்கல் மற்றும் தடுப்பு செயல்படுத்தலை மேம்படுத்துதல்.
- SGBV தடுப்பு மற்றும் பதிலளிப்பு ஏற்பாடுகளை மேம்படுத்த முறையான இடைவெளிகளைக் கண்டறிவதன் மூலம் SGBV இல் உயிர் பிழைத்தவர்களின் தேவைகளுக்குப் பதிலளிக்க தற்போது கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் முன்முயற்சிகளை நிவர்த்தி செய்வதற்கான முன்னர் நிறுவப்பட்ட பணிக்குழுக்கள் மற்றும் SGBV க்கு தீர்வு காண்பதற்கான கொள்கை கட்டமைப்பின் தாக்கம் மற்றும் செயல்திறனை அளவிடுதல்.
- சிவில் சமூக வகிபாத்திரங்கள் மற்றும் இலக்கு குழுக்களின் பரிந்துரைகள் உட்பட ஞபுடீஏ சேவை வழங்குநர்களின் மிகவும் பயனுள்ள மற்றும் நிலையான தலையீட்டை தெரிவிக்க கற்றுக்கொண்ட பாடங்களை அடையாளம் காணவும்.
- வரைபடமாக்கல் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்தும் சிவில் சமூக வகிபாத்திரங்களின் நடைமுறைப் பரிந்துரைகளில் இருந்தும் அத்துடன் நீதி அணுகுமுறைக்கான பயனுள்ள அணுகலை எவ்வாறு செயல்படுத்துவது, மேம்படுத்தப்பட்ட ஞபுடீஏ சேவையை வழங்குவது, விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் வாங்குதல் கோரிக்கை ஆகியவற்றிலிருந்து ஆராய்ச்சியை செயல்படுத்துவதை ஆரம்பிக்கவும் .
- சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசாங்க அமைப்புகளுக்கு முன்னோக்குகள், கற்றுக்கொண்ட பாடங்கள், மேலும் முக்கியமாக அறிக்கையின் பரிந்துரைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றிய கூடுதல் வலையமைப்பை பரிமாறிக்கொள்ளல் வேண்டும்.

### நிறுவன பின்னணி

www.viluthu.org

### பாத்திரம் மற்றும் பொறுப்புக்கள்

- அந்தந்த மாவட்டத்தில் அனைத்து ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைகளையும் நடத்துவதற்கான முதன்மைப் பொறுப்பை மாவட்ட ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டும்.
- மாவட்ட ஆய்வாளர் தனது ஆராய்ச்சிக் குழுவுடன் மாவட்டத்தில் உள்ள அனைத்து அளவு சார்ந்த தரவு இசகரிப்பு கருவிகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவார். அத்துடன் குறிப்பான சில பதிலளிப்பாளர்களுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரத்தியேகமான வினாத்தாள்களையும் நிர்வகித்தல் வேண்டும்.
- அவர் தர அடிப்படையிலான தரவு சேகரிப்பு செயல்பாட்டின் போது தேவையான அனைத்து நேர்காணல்களையும் மேற்கொள்வார், மேலும் திட்டத்திற்கு தேவையான பின்தொடர்தல் நேர்காணல்கள், ஆரம்ப பயிற்சி அமர்வுகள், பங்குதாரர்கள் மற்றும் பெண்களுடனான தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.
- தரவு சேகரிப்பில் பங்கேற்கும் மாவட்ட ஆராய்ச்சி குழு தரவு கணக்கீட்டாளர்களுக்கு மாவட்ட ஆராய்ச்சியாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
- அவர் ஆராய்ச்சிக் குழுவின் செயலில் உறுப்பினராக இருப்பதோடு, தரவு சேகரிப்பு கருவிகளை உருவாக்குதல், தரவு பகுப்பாய்வு, அனைத்து திட்ட இலக்கியங்களையும் மதிப்பாய்வு செய்தல் மற்றும் ஆராய்ச்சி குழு மற்றும் விழுதுக்கு துணைத் தரவை வழங்குதல் ஆகியவற்றில் முன்கூட்டியே உதவுதல் வேண்டும்.
- மதிப்பாய்வு மற்றும் முதன்மை ஆராய்ச்சி ஆலோசகருக்கு தேவையான அனைத்து பணிகளிலும் உதவுவதுடன் கருவி உருவாக்கும் கட்டத்தில் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படும் ஆரம்ப ஆலோசனைகளின் அடிப்படையில் தரவு சேகரிப்பு கருவிகளை உருவாக்க அவர் ஆராய்ச்சி குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.
- அவர் மதிப்பாய்வின் போது ஞபுடீஏ தொடர்பான தற்போதைய இலக்கியங்கள், வெளியீடுகள் மற்றும் உள்ளூர் கட்டமைப்புகளை ஆதாரமாகக் கொண்டு சேகரிப்பதன் மூலம் ஆராய்ச்சிக் குழுவிற்கு உதவ வேண்டும் மற்றும் மாவட்ட அளவில் மதிப்பாய்வை எளிதாக்க வேண்டும்.
- மதிப்பாய்வுக்குத் தேவையான மற்றும் தொடர்புடைய அனைத்து சாத்தியமான தகவல்களையும் பெற, மாவட்ட ஆராய்ச்சியாளர் பல்வேறு பங்குதாரர்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.
- மாவட்ட அளவில் RTI விண்ணப்பங்களை தாக்கல் செய்வது, இலக்கியம் மற்றும் கொள்கை ஆவணங்களைத் தேடுவது அவசியம்.

### வழங்கப்பட்டுள்ள பாத்திரங்களைத் தவிர, மாவட்ட ஆய்வாளர்:

- ஆலோசனை மற்றும் பயிற்சி அமர்வுகளின் போது (இணையம் மூலம் மற்றும் நேரில்) முன்னணி ஆராய்ச்சி ஆலோசகர், விழுது பணியாளர்கள் மற்றும் பிற வள நபர்களுக்கு உதவுதல் மற்றும் தேவையான இடங்களில் உள்ளீடுகளை வழங்குதல் வேண்டும்.
- ஆராய்ச்சிப் பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, தரவு சேகரிப்பின் போது ஆய்வுக் குழு, மாவட்ட ஆய்வுக் குழுக்கள் மற்றும் விழுது பணியாளர்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும்.
- ஆராய்ச்சிப் பணியின் ஒரு பகுதியாக ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்து மாவட்ட அளவிலான அமர்வுகளையும் ஒழுங்கமைப்பதற்கும் மற்றும் தேவையான இடங்களில் விளக்கக்காட்சிகளை வழங்குவதற்கும் உதவுதல் வேண்டும்.
- முன்னணி ஆராய்ச்சி ஆலோசகர் மற்றும் விழுது மூலம் தேவைப்படும் போது மற்றும் வழங்கக்கூடிய அனைத்து தொடர்புடைய செயல்பாடுகளையும் வெற்றிகரமாக முடிக்க தொடர்புடைய பங்குதாரர்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும்.
- ஆராய்ச்சி குழு மற்றும் விழுதுக்கு தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம் திட்ட காலத்திற்குள் அனைத்து வழங்கல்களையும் நிறைவு செயவதை உறுதி செய்யவும்.
- அனைத்து திட்டப்பணிகள் தொடர்பான அமர்வுகளிலும் உடல் ரீதியாகவும், இணைய வழியாகவும் பொருந்தக்கூடிய வகையில் கலந்துகொள்ளல் வேண்டும்.
- ஆராய்ச்சிக் குழு மற்றும் விழுது ஆகியவற்றை ஆராய்ச்சி நோக்கங்கள் மற்றும் வழங்கக்கூடியவைகளை அடைவது தொடர்பாக செய்யப்படும் நடவடிக்கைகள் குறித்து புதுப்பிக்கவும்.
- முன்னணி ஆராய்ச்சி ஆலோசகர், மற்ற திட்ட பணியாளர்கள் மற்றும் விழுது ஆகியோரால் கோரப்பட்ட திட்ட மற்றும் ஆராய்ச்சி கடமைகளை மேற்கொள்ளவும்.
- பொது மக்களுக்கு ஆராய்ச்சியிளை ஆரம்பிப்பதற்கு முன்னர், விழுது மற்றும் மதிப்பாய்வாளர்களுக்குத் தேவையான அனைத்து பிந்தைய காலக்கெடு அறிக்கை ஃஆராய்ச்சி திருத்த வேலைகளையும் நிறைவு செய்தல் வேண்டும்.

### குறிப்பான வழங்கல்கள்

- மாவட்ட அளவில் பெண்கள், மாநில மற்றும் மாநிலம் அல்லாத SGBV சேவை வழங்குநர்களை இலக்காகக் கொண்ட கேள்வித்தாளை நிர்வகிப்பதன் மூலம் அளவைக்குரிய தரவு சேகரிப்பை நிறைவு செய்தல்.
- மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல் வழங்குநர்கள் மற்றும் இலக்கு நபர்களுடன் நேர்காணல்களை மேற்கொள்வதன் மூலம் தர அடிப்படையிலான தரவு சேகரிப்பை நிறைவு செய்தல்.
- தரவு சேகரிப்பு அமர்வுகளின் போது பயன்படுத்தப்படும் கையெழுத்துப் பிரதிகள் மற்றும் நேர்காணல் பதிவுகளின் முழுமையான தொகுப்பு.

### தகுதிகள் மற்றும் திறமைகள்

- விண்ணப்பதாரர்கள் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து தொடர்புடைய துறைகளில் குறைந்தபட்ச முதுநிலைத் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- SGBV மற்றும் பாலினம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் அவசியம்.
- SGBV அல்லது பாலினம் தொடர்பான முந்தைய வேலை அனுபவங்கள் ,ருத்தல் அவசியம்.

இருமொழிகளில் (சிங்களம், தமிழ்) வேலை செய்யும் திறன் ஊக்குவிக்கப்படுகிறது. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் தொடர்புடைய ஆராய்ச்சி மாவட்டத்தில் முழுநேர வதிவிடதாரராக இருக்க வேண்டும்.

### கால அளவு

சேவை ஒப்பந்தமானது, உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு முதல் ஏழு மாத காலத்திற்கு, திட்டம் முடியும் வரை நீட்டிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுடன் (கூடுதல் மூன்று மாத நீட்டிப்பு) ,யங்கும்.

### கட்டணம் மற்றும் செலவுகள்

பேச்சுவார்த்தைக்குட்பட்டது

### விண்ணப்ப செயல்முறை


இரண்டு மத்தியஸ்த்தர்களின் தொடர்பு விவரங்கள், SGBV தொடர்பாக நடத்தப்பட்ட முந்தைய ஆராய்ச்சியின் சான்றுகள் மற்றும் இரண்டு எழுத்து மாதிரிகள் ஆகியவற்றுடன் ஒரு விரிவான சுயவிபரக் கொத்தினை (CV யை) research@viluthu.org க்கு மின்னஞ்சல் செய்யவும்.

விண்ணப்பங்களுக்கான இந்த அழைப்பு விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்கு திறந்திருக்கும். விரைவில் ஆட்சேர்ப்பு செயல்முறையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதால், விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்ப செயல்முறையை வெகு விரைவில் ஆரம்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 06 . 1942



மறைவு
24 . 06 . 2022

## சின்னத்தம்பி முருகையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.134/2, திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் பூநகரி பிரதேசசபை கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி முருகையா அவர்கள் 24.06.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தனலக்குமியின் பாசமிகு கணவரும், திருமாறன் (மாறன் பல்பொருள் வாணிபம் -திருவையாறு), திருபரன் (மகிந்தன் - CIC நிறுவனம்), தர்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலதா, சுகந்தினி (குடும்பநல உத்தியோகத்தர்), ஆதீஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், புவனேந்திரன், கனகாம்பிகை, காலஞ்சென்றவர்களான பற்குணபூபதி, வேலாயுதம் மற்றும் திலகவதி, இராஜபூபதி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகபூரணம், சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி, கனகாம்பிகை, சண்முகநாதன் தேவராணி ஆகியோரின் மைத்துனரும் விபூஷன், பிரகித், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 354 2643, 077 289 2168

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 07 . 1950



மறைவு
23 . 06 . 2022

## வெற்றிவேலு இராசலட்சுமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வாழ்விடமாகவும் தற்போது அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு இராசலட்சுமி கடந்த (23.06.2022) வியாழக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் மற்றும் சரஸ்வதி, மாணிக்கத்தியாகராசா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாருமதி, சயாமளா, சசிகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன், ரஜனிகாந், ஞானகணேஸ் ஆகியோரின் மாமியாரும், மாதுரி, பைரவி, பிரணவன், மிதுசனன், சிந்துயன், கஜவர்தன், விதுரன், ஆர்திகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாங்கானை வீதி,**
**அளவெட்டி.**
**(பழைய தபால்கந்தோர்)**

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 02 . 1959



மறைவு
27 . 05 . 2022

## திருமதி நாகேஸ்வரி (சாந்தி) நிரஞ்சன்

(யாழ்ப்பாண கல்லூரி வட்டுக்கோட்டை பழைய மாணவி)

குளியாபிட்டியைப் பிறப்பிடமாகவும் அராலி கிழக்கு, ஜேர்மனி, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி (சாந்தி) நிரஞ்சன் (HNC Business) அவர்கள் கடந்த (27.05.2022) லண்டனில் காலமானார்.


அன்னார் குளியாபிட்டி PWD ஓவசியராயிருந்த காலஞ்சென்ற ரங்கநாதன் - பஞ்சரட்ணம் தம்பதியரின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான திலகவதி (ஆசிரியை), வேலாயுதபிள்ளை (ஆசிரிய கல்லூரி விரிவுரையாளர்) தம்பதியரின் அன்பு மருமகளும், நிரஞ்சனின் ஆருயிர் மனைவியும், அனுசன் (ஜேர்மனி), வினுசன் (ஜேர்மனி), சுகன்யா (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யஸ்மின்னின் அன்பு மாமியும், நயல்சம் நிக்கில்லின் அன்புப் பேர்த்தியும், ரவிசந்திரன் (ரவி - பிரான்ஸ்), ரவீந்திரா (சிறி), பாலசுப்பிரமணியம் (ஜெயா), ஜீவராஜன் (ஜீவா), வசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (கனடா), ரஜனி (கனடா), சிறிஸ்கந்தா (ரகு- Uk) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாரிஒடயல், லிங்கா, ராஜி, கிறிஷாந்தி ரொபேட் ரவீந்திரன், சுந்தரபாலா, தர்சினி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற Dr.சுதர்சன், குமுதினி, அசோகன் (பாகிஸ்தான்), மாலினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், கமிலி, ஒலிவர் ஹெலன், டயானா, வைகுந்தன், நிர்த்திகா, ரஜீவ், பிரவீன் ஆகியோரின் மாமியாரும், பிராங்கி, பியங்கா ஜொனி, டானியல், டுல்சி, ஜொய்சி, துளசி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.06.2022) திங்கட்கிழமை லண்டன் Co - op Funeral Care Mono Park 50 Whilta Road E - 125 DA இல் பார்வைக்கு வைக்கப்பட்டு 28.06.2022 திகதி இறுதிச் சடங்கு (North Chaple, City Of Landon Cemetery Crematorium, Alders brook Road Landon E125 DQ நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்றோம்.

தகவல்:
சகோதரர்கள்
ரவீந்திரா - 077 349 5872
ஜீவராஜன் - 077 755 9717
பாலா - 076 755 9850

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 01 . 1940



மறைவு
24 . 06 . 2022

## இராமமூர்த்தி விவேகானந்தன்

வடலியடைப்பு அரசடி வீதி, புத்தடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமமூர்த்தி விவேகானந்தன் 24.06.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமமூர்த்தி இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னம் அவர்களின் அன்புக் கணவரும், கயல்விழி (சுவிஸ்), மலர்விழி (லண்டன்), கஜேந்திரன் (ரேஸ்ரி லாண்ட் ரெஸ்ரோரண்ட், திருநெல்வேலி), கவிதாசன் (அவுஸ்ரேலியா), கவிதா (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரகுமாரன் (சுவிஸ்), முரளீதரன் (லண்டன்), கண்மணிதேவி, மேனகா (அவுஸ்ரேலியா), ஆனந்தன் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இந்துஜா, ஷர்கிந், மாதனியா, டிலோஜன், லதுஷன், அஸ்வின், அனன்ஜா, ஆரபி, சிவன், கனிகா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், சதானந்தனின் அன்புச் சகோதரனும், வேலாயுதம், கனகம், செல்லம், காலஞ்சென்ற ஜெகநாதன், மகேஸ்வரி, சரோஜினிதேவி, விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, காசிநாதன், நடராசா, தனலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தெய்வநாயகி, செல்வநாயகம், கனகசபாபதி, மகாதேவன், நடராசா, யோகலக்சுமி, காசிநாதர், பத்மலோஜினி, வனிதா ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]லைச் சங்க ஒழுங்கை,
அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்
077 074 9029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தர்மலிங்கம் சின்னம்மா (விமலேஸ்வரி)
### (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சின்னம்மா (விமலேஸ்வரி) நேற்றுமுன்தினம் (24.06.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தர்மலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற மலர்மதி, திஷா, தினேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவீந்திரராஜ், திலீபன், நவதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றக்சிக்கா, றுக்சானி, றுக்சான், வின்சிகா, டெக்சிக்கா, துலக்சிக்கா, அக்சயா, அக்சரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(es 45335)(2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 08 . 1934



இறப்பு 23 . 06 . 2022

## சின்னையா பஞ்சலிங்கம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பஞ்சலிங்கம் கடந்த (23.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சரஸ்வதி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபை இரத்தினம்மா தம்பதியினரின் மருமகனும், தவமணிதேவியின் (சாரதா) அன்புக்கணவரும் ஸ்ரீகுமரகுருபரன் (பாஸ்கரன்-கனடா), காலஞ்சென்ற வஞ்சிதன், ராஜி (கனடா), பகீதரன் (கனடா), சசிகலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வஞ்சி, குகன், ஜெயச்சந்திரன், சகிலா மற்றும் சுகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, விஷ்ணுதன், பிரவீன், சியாமினா, லக்ஷன், நிஷா, அபினா, ஜெனுசா, ஜெசிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசதுரை, சகுந்தலாதேவி, புலேந்திரராஜா, நவரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலைஞானதேவி, காலஞ்சென்ற சோமசுந்தரம், கனகறஞ்சினி, சுபத்திரா, காலஞ்சென்ற வைரவநாதன், லோகசௌந்தரி, யோகராணி, கமலாதேவி, சபாரத்தினம், காலஞ்சென்ற இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் நிசாந்தன், அனித்தா, நிசாந்திகா, ஜான்சன், காலஞ்சென்ற திவாகர், பிரியந்தா, ஜெய்கரன், சாருஜன், இந்துஜா, நதியா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 684 5510

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 10 . 1932



மறைவு 23 . 06 . 2022

## இராசையா சபாரத்தினம்

யாழ். கந்தரோடையப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட இராசையா சபாரத்தினம் கடந்த (23.06.2022) வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா செல்லமுத்து தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், கிருஸ்ணலீலா (லீலா), ஜெயராணி (ராணி), சாரதாதேவி (தேவி), ஸ்ரீதரன், ஸ்ரீபாஸ்கரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கிருபாகரன், சிவநேசன், அமிர்தலிங்கம் (துரை), கௌரி, மகாலட்சுமி, நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனகரத்தினம், காலஞ்சென்ற பாலசிங்கம், மயில்வாகனம், பத்மநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்தானலட்சுமி, சந்திரபிரபா, சறோஜினிதேவி, காலஞ்சென்ற பாலயோகினி, ஜெகதீஸ்வரி, ஆனந்தராசா, மனோகரன், மகேசன் ஆகியோரின் மைத்துனரும், மகேஸ்வரி, ஜெகாம்பிகை (தேவி), ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், அனுஷா - கஜன், கீதவாணி - சேந்தன், ரமேஸ் - றொஷானி, யசிந்திரன், சர்மிலன், சர்மிதா - பகிரதன், சஜிதா, சரண்யன், அபி, தஷான், நிதுஷன், சாண் ஆகியோரின் பாசமிகு பேரனும், லஷ்மீகா, உவந்திகா, ஆர்மீகன், ஆர்த்திகன், அபிணாஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

**அன்னாரின் இறுதி நிகழ்வுகள்**

**இடம்:** 55, ruegince,Montreal (st - Laurent) Quebec, Canada H4N1J7

**அஞ்சலிக்கு :** சனிக்கிழமை பி.ப.04.00 - 09 .00 மணிவரை

**கிரியை :** ஞாயிற்றுக்கிழமை (26.06.2022) மு.ப. 09.00 - 10.00மணி

**தகனம் :** மு.ப.10.00 - 12 - 45 மணிவரை

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் ஏற்றுக்கொள்ளவும்.

மகள் - லீலா
(021 224 0339)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1961



இறப்பு 24 . 06 . 2022

## இராசரட்ணம் ஸ்ரீதர்

வேலைணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும சாவகச்சேரி சோலையம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் ஸ்ரீதர் 24.06.2022 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராசரட்ணம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கநேசம் தம்பதியரின் அன்பு மருமகனும், காந்திமதியின் அன்புக் கணவரும், நிலக்சன், சுஜிந்தன், நிரூபன், நிரோஜன், கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மிதுசாலினி, நிதுர்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயாத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
மண்டுவில், சாவகச்சேரி.
077 984 2327

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணலிங்கேஸ்வரர் பெருந்திருவிழா

வட்டுக்கோட்டை ஜூன் 26

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து தினங்கள் நடைபெறவுள்ள இந்தப் பெருந் திருவிழாவின் ஒன்பதாம் நாளான 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 430 மணிக்கு புதித்தாக வடிவமைக்கப்பெற்ற சித்திரத் 'தேரில் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் எழுந்தருளி வீதிவலம் வருதலும் ஆனி உத்தர நன்னாளான மறுநாள் புதன்கிழமை அதிகாலை 4மணிக்கு நடேசர அபிஷேகமும் காலை 6மெணிக்கு ஆனி உத்தர தரிசனமும் நண்பகல் 12 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுவதுடன் மாலை 7மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. அத்துடன் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து கண்ணலிங்கேஸ்வரரை தரிசித்து இஷ்ட சித்திகளை பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.



## சிறுவர் கதை நூல் வெளியீட்டு விழா

கொடிகாமம், ஜூன் 26

கவிஞர் நந்தினியின் 'சிந்தை கவரும் சிறுவர் கதைகள்' சிறுவர் கதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முகமாலையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ம.சிறீதாசன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர் நூலின் முதற்பிரதியை வெளியிட்டு வைக்க, யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவர் யோ.விதுஷன் பெற்றுக்கொண்டார். (ச-159)


# VACANCIES @ BLC Campus Jaffna

We are looking for enthusiastic candidates for the following vacancies



**1. Enrolment Excecutive**

- Age limit between 18 to 35 Years
- Should possess good interpersonal skills
- Should be able to work on Weekends
- Should participate in Students' enrollment activities
- Attractive Salary packages will be offered
- Prior Experience in The Similar Positions will be an added advantage.

**2. Academic Coordinator**

- Should possess Higher Diploma or Degree Qualification
- Be fluent in English
- Should be able work independently
- Must be able to coordinate academic activities and handling documents
- Familiar to work with MS Office, Internet & Email

**How to Apply:**
**Please forward your detailed CV indicating the post applied with the details of two non-related referees to info@blccampus.com on or before 30th of June 2022**

BLC CAMPUS

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 222 3355

E - info@blccampus.com
www.blccampus.edu.lk


# மரமுந்திரிகைத் தொழிலாளரின் சம்பளத்தை அதிகரியுங்கள்!

## பிரதேசசபைத் தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 26

பூநகரிப் பகுதியில் மரமுந்திரிகை விதைகளைச் சேகரிக்கும் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு பூநகரி பிரதேசசபைத் தவிசாளர் சி.சிறிரஞ்சன், பூநகரி அரச மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரச மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாள ருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், மேலும் உள்ளதாவது:-

மரமுந்திரிகை விதைகளைச் சேகரிக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ கிராம் மர முந்திரிகை விதைகளை சேகரிப்பதற்காக 50 ரூபா வழங்கப்படுகின்றது. எனினும் பயிற்றப்படாத தொழிலாளி ஒருவருக்கு மாவட்ட விலை நிர்ணய குழுவால் நாளொன்றுக்கு 8 மணித்தியாலக் கூலியாக 2 ஆயிரம் ரூபா என வரையறை செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளிகள் அரசால் வரையறை செய்யப்பட்ட நாளொன்றுக்கான கூலியைப் பெற வேண்டுமாயின் 40 கிலோ கிராம் விதைகளைச் சேகரிக்க வேண்டும். எனினும் குறைந்தது ஒருவர் நாளொன்றுக்கு 20 கிலோகிராம் விதைகளை சேகரிப்பதே சிரமமான தாகும். சராசரியாக 10 மணிநேர வேலையின் பின்னர் ஊதியமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொள்வதே மிக அரிதாகவுள்ளது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த ஊதியத்தைக் கொண்டு தொழிலாளர்கள் நாளாந்த உணவுத்தேவையைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலையுள்ளது.

[illegible] தொழிலாளிக்கு [illegible] மாவட்ட விலை நிர்ணயக் குழுவால் மிகக் குறைந்த கூலியாக 2 ஆயிரம் ரூபா வழங்குவதுடன், மேலதிகமான விதை சேகரிக்கும் ஒவ்வொரு அலகுக்கும் குறிப்பிட்ட பணத்தொகையை நிர்ணயம் செய்வதன் மூலம் அவர்களின் நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

இதேவேளை - மரமுந்திரிகைச் சேகரிப்புக் கூலிகள் கணக்கிட்ட பின்னர் வீடு செல்லும்போது தம்மைச் சோதனைக்குட்படுத்துவதால் தாம் மனநிலை பாதிக்கப்படுவதாக தொழிலாளர்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே இவ்வாறான முறையற்றதும் மன வேதனைகளை உருவாக்கும் சோதனை முறைமைகள் நீக்கப்பட்டு இரகசியமான முறையில் விதைகள் களவாடப்படும் விடயங்கள் கையாளப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றுள்ளது. (ம-14.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நீர்வெட்டு

கொழும்பு, ஜூன் 26

கொழும்பின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று இரவு 10 மணி வரையான 24 மணிநேரத்தில் சுமார் 10 மணிநேரம் நீர்வெட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருத்தப்பணிகளுக்காக 17 மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது 10 மணி நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மாணவர்களுக்கு மனனப் போட்டி!

யாழ்ப்பாணம், ஜூன் 26

சுழிபுரம்மேற்கு, கலைமகள் அறநெறிப் பாடசாலையால், சைவசமய நெறிகளை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு போட்டிகள் மாதாந்த ரீதியில் நடத்தப்படுகின்றன.

அதற்கமைய ஜூன் மாதத்துக்கான மனனப் போட்டிகள் சுழிபுரம் மேற்கு ஹரிகரபுத்திர ஐயனார் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பல மாணவர்கள் கலந்துகொண்டு போட்டியில் பங்குபற்றினர். (ம-14,125)

# 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 26

'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழாவின் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் என்ற தொடரின் மூன்றாவது அமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை பல்கலைக்கழக மாணவன் நா.கபிலன், ஆசிரியர் ச.வாகீசன், ஆய்வாளர் ச.சஜீலன், ஆசிரியர் பூ.நகுலன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இயல்வாணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் புத்தக அரங்க விழாவையொட்டி சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-14)

# அங்குசபாச பிள்ளையார் அலங்கார உற்சவம்

வண்ணை அங்குசபாசப் பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) ஆலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 அபிஷேகம் மற்றும் தீர்த்தோற்சவம் ஆகியன நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு மாகேஸ்வரபூஜையும் இடம்பெறும்.

மாலை 5மணிக்கு வசந்த மண்டப பூஜையை அடுத்து திருவூஞ்சலும் பெருமான் நாவலர் வீதி, கே.கே. எஸ். வீதி, சிவன் வடக்குவீதி, தபாற்கந்தோர் ஒழுங்கை வழியாக நகர்வலம் வந்து ஆலயம் சேர்வார்.

# 36 மாணவர்களுக்கு சூரிய மின்விளக்குகள்

சாவகச்சேரி, ஜூன் 26

வரணிப் பிரதேச பாடசாலைகளில் கல்விகற்கும் பொருண்மியம் நலிந்த குடும்பத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 36 மாணவர்களுக்கு சூரிய மின்விளக்குகள், நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

லண்டன் செரண்டிப் சிறுவர் இல்லத்தின் நிதிப்பங்களிப்பில் தலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய மின்விளக்குகளே இவ்வாறு வழங்கப்பட்டன.

அதிபர் க.கோஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் செரண்டிப் சிறுவர் இல்ல இணைப்பாளர், உத்தியோகத்தர்கள், அதிபர்கள், மாணவர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,159)

# சிவலிங்க சிவபூமி சிவலாய திருக்குட நன்னீராட்டு விழா

வவுனியா, ஜூன் 26

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட 108 சிவலிங்க சிவாலய சிவபூமி ஆலயத்தின் மங்கல திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு சிவலிங்கம் படிம நிறுவுதல், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு என்பன இடம்பெறும். எனவே சிவனடி பிரார்த்தனைகளில் பக்த அடியார்களைக் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)


யாழ். போதனா வைத்தியசாலையில் பின்புறமாக உள்ள விக்ரோறியா வீதியில் உள்ள சைக்கிள் தரிப்பிடத்தில் கடந்த (24.06.2022) வெள்ளிக்கிழமை அன்று கிளினிக்கு வந்த நபர் ஒருவர் சைக்கிள் பார்க்கிலிருந்து தனது சைக்கிளிற்கு பதிலாக வேறொரு நபரின் சைக்கிளை தவறுதலாக எடுத்துச் சென்றுள்ளார். தயவு செய்து தவறுதலாக கொண்டுசென்ற சைக்கிளை தந்து விட்டு அவரது சைக்கிளை பெற்றுக்கொள்ளவும்.
(குறிப்பு: குறித்த சம்பவம் அனைத்தும் CCTV Camara வில் பதிவாகியுள்ளது)
தொடர்பு: 077 3611 282

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்தில் கீழ்வரும் வேலையாட்கள் தேவை
1) தச்சு வேலையாட்கள் 2) பெயின்ரர் (தளபாடம்)
3) கூலி வேலையாட்கள்
தொடர்பு:- ஆர்க் தளபாடநிலையம்
இல:- 35, கொட்டைகாடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பஸ்டிப்போ அருகாமை)
T.P- 021 221 9909
077 300 1763

## சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை

பற் சிகிச்சை நிலையத்தில்
உதவியாளராக பணி புரிவதற்கு திருநெல்வேலி, கந்தர்மடம் அயலில் வசிக்கும் O.Level, A.Level வரை படித்த பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. சுயவிபர தரவுகளுடன் தங்கள் விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
(CS.367) (2.6)
198, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## காணவில்லை



நாகம்மா கோயில் வீதி, உடுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு.ஸ்ரீதரன் டினிஸ்ரன் (அஜித்) ஒரு குழந்தையின் தந்தை. கடந்த (18.06.2022) சனிக்கிழமை முதல் காணவில்லை. காண்பவர்கள் தகவல் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு :- 077 4911 596

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, [illegible]
கரு[illegible]
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர்,அரச உத்தியோகத்தர், ஆசிரியர்,வங்கியியலாளர்,தனியார் துறையினர்,உள்நாட்டு,வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்களும் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.
264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- 077 138 7596
074 289 0596
021 222 9306

## HEALTH CARE ASSISTANT

UK
நேர்முகத் தேர்வு : 27/06/2022 திங்கட்கிழமை
நேரம் : 9.00 AM - 12.00 AM
Spot Admission
- UK செல்வதற்கு ஆர்வமுடையவர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் நேர்முகத் தேர்வில் தோற்ற முடியும். தாதியர்கள், உதவித் தாதியர்கள், PHI, மருத்துவத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு முன்னுரிமை. IELTS அவசியமில்லை.
- CV சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுடன் தொடர்புகட்கு
076 685 2529

## வேலை வாய்ப்பு

பதவி நிலை: சிட்டை எழுதுநர் (01) பெண்
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது விற்பனை நிலையம், காட்சியறை (Show Room) இல் பணியாற்றத் தகுதியுடைய மேற்படி பதவிநிலைக்கு (01) பெண் ஊழியர் தேவை.
தகைமைகள்:
1. க.பொ.த. சாதாரண தரத்தில் கணித பாடத்தில் (C) திறமைச் சித்தி உடன் சித்தியடைந்திருத்தல்
2. க.பொ.த. உயர்தரம் சித்தி
3. கணினி அறிவு விரும்பத்தக்கது
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுடையோர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ / Whatsopp இலக்கத்திற்கோ தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்துடன் சுய விபரக்கோவையை 29.06.2022 இற்கு முன் அனுப்பவும்
gchenthu111@gmail.com
(cr.36255) (2.6) 077 675 7178

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL
- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!
மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773
பாத்திமா : 0706 697 660 | வேணுகா : 0718 517 994
Beverley International
Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656
Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கைப் பேராசிரியர்கள் மூவர் நேற்று நியமனம்


பேராசிரியர் குமரேந்திரன்


பேராசிரியர் திருமதி கீதாஞ்சலி


பேராசிரியர் குமணன்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூன்று துறைகளுக்கு துறைக்கான இருக்கைப் பேராசிரியர்களாக மூன்று பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அங்கீகாரத்தைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ பீடத்தின் மருத்துவத்துறை, குழந்தை மருத்துவத்துறை மற்றும் சமுதாய, குடும்ப மருத்துவத்துறை ஆகிய துறைகளில் நீண்டகாலமாக நிரப்பப்படாதிருந்த இருக்கைப் பேராசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பகிரங்க விளம்பரத்துக்கமைவாக கிடைத்த விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மருத்துவத்துறையில் பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான பேராசிரியர் தி.குமணனை மருத்துவத்துறைப் பேராசிரியராகவும், குழந்தை மருத்துவத்துறையில் பேராசிரியரும், குழந்தை மருத்துவ நிபுணருமான பேராசிரியர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸை குழந்தை மருத்துவத்துறைப் பேராசிரியராகவும், சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியரும், சமுதாய மருத்துவ நிபுணருமான பேராசிரியர் குமரேந்திரனை சமுதாய மருத்துவத்துறைப் பேராசிரியராகவும், அந்தந்தத் துறைகளுக்கான இருக்கைப் பேராசிரியர்களாகவும் நியமிப்பதற்கு தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (அ-ஒ-இ)

# பதவியிழந்த மஹிந்தவை சந்தித்தார் சீனத் தூதுவர்

மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியையிழந்த பின்னர் அவரை முதல் தடவையாக இராஜதந்திரியொருவர் சந்தித்துள்ளார். இலங்கைக்கான சீனத்தூதுவரே நேற்றுமுன்தினம் அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் கடினமான இந்தக் கால கட்டத்தில் உதவுவதற்காக சீனாவுக்கு மஹிந்த தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இலங்கை மக்கள் மிகவும் பொறுமையாக இருப்பதாகவும், அதற்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும், இலங்கையின் நிலை மிக விரைவில் வழமைக்குத் திரும்பும் எனவும் சீனத் தூதுவர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## ஒரு குடும்ப...

வர்கள் ஊடாக அனைவருக்கும் எரிபொருள் அட்டை வழங்கப்படும் என்று யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கே விநியோகிக்கப்படவுள்ளது. இது தொடர்பான பதிவுகளை கிராம அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு எரிபொருள் அட்டையே முதற் கட்டமாக வழங்கப்படும். அதே குடும்பத்தில் அரச பணியாளர்கள் இருந்தால் அவர்களுக்கு திணைக்களத் தலைவர்கள் ஊடாக எரிபொருள் அட்டை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## இந்த வாரம்...

பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்கள் கடந்த 23ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்று அமைச்சர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் இரு தடவைகள் அவை ஒரு நாள் தாமதமாகி வரும் என்று அவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மேற்கண்டவாறு தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

'பெற்றோல், டீசல் மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதிகள் இந்த வார தொடக்கத்திலும் அடுத்த வாரத்திலும் வருவதை உறுதி செய்த வழங்குநர்கள், வங்கி மற்றும் இதர காரணங்களுக்காக சரியான நேரத்தில் வழங்கல் கட்டளையை நிறைவேற்ற இயலாமை குறித்து தெரிவித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறியத்தந்தமையை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்த எரிபொருள் இறக்குமதிகள் துறைமுகத்தில் இருந்து இறக்கப்படும் வரை, பொதுப் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வரையறுக்கப்பட்ட அளவிலேயே டீசல் மற்றும் பெற்றோல் என்பன நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும். எனவே எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். எரிபொருள் வருகை திகதிகளை உறுதிப்படுத்த முடியவில்லை. அடுத்த கச்சா எண்ணெய் இறக்குமதி வரை சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படும். புதிய மற்றும் ஏற்கனவே உள்ள அனைத்து வழங்குநர்களுடனும் நாங்கள் தொடர்புகொண்டு மேலதிக நடவடிக்கையை எடுத்து வருகின்றோம். தாமதம் மற்றும் சிரமத்துக்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்' என்று அவர் பதிவிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## மண்ணெண்ணெய்...

விநியோகம் செய்யப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் எம்.டி.எஸ். பெரேரா மக்கள் படும் துன்பங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக பெருமளவான மக்கள் திரண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அங்கிருந்த பெண் ஒருவரும் குழந்தையும் கீழே வீழ்ந்துள்ளனர். குழந்தைக்கு சற்று உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாகவும், மண்ணெண்ணெய் அவசியம் என்பதால் குழந்தையை இந்த இடத்துக்கு அழைத்து வந்ததாகவும் குழந்தையின் தாய் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இங்கிரியவில் உள்ள உருகல சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் இரவு பகலாக எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு உணவு வழங்கியுள்ளார். மக்களின் அசௌகரியத்தை உணர்ந்தே இந்தச் செயலை மேற்கொண்டதாக அதன் உரிமையாளர் கெலும் பிரசன்னவும் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். (அ-ஒ-இ)

## யாழ். மாவட்டத்தில்...

மேற்பட்ட பேக்கரிகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

பேக்கரிகள் மூடப்படுவதன் ஊடாக சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களின் குடும்பங்கள் [illegible] நடமாடும் பாண் [illegible] 500 க்கும் அதிகமான முச்சக்கர வண்டிகளின் சேவை பாதிக்கப்படுகின்றது. அதனை வாழ்வாதாரமாக நம்பியுள்ள குடும்பங்களின் நிலைமையும் பரிதபமாகின்றது.

ஏற்கனவே பாண் உற்பத்திக்கான மூலப்பொருள்களின் தட்டுப்பாட்டினாலும், விலையேற்றத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள பேக்கரி உரிமையாளர்கள் எரிபொருள் கிடைக்கப் பெறாத நிலையில் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாண் உற்பத்திக்குத் தேவையான டீசல் ஓரளவு கிடைக்கின்றபோதும் நடமாடும் விநியோகத்துக்குத் தேவையான பெற்றோல் கிடைக்காமையால் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். அத்தியாவசிய சேவையாக கருதி எமக்கும் பெற்றோல் வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## நாளை முதல்...

பாடசாலைகள் நாளை ஆரம்பமாகும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அது இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை குழப்புகின்ற அரசியலாகவே இருக்கின்றது. அதாவது நகர்ப்புற பாடசாலைகள் மூன்று நாள்களும் கிராமப்புற பாடசாலைகள் ஐந்து நாள்களும் நடைபெற வேண்டுமென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கிராமப்புறங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாக நகரங்களிலிருந்து செல்கின்றவர்கள். அவர்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து மார்க்கங்கள் எதுவுமே இங்கில்லை. பொதுப் போக்குவரத்து பேருந்துகள் கூட அந்த ஆசிரியர்களை ஏற்றிச்செல்ல மறுக்கின்றன. அவர்கள் தனியாகச் செல்வதற்கு எரிபொருள் இல்லை. இந்த நிலையில் அவர்களை பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பியுங்கள் என்று கூறுவது உண்மையில் மோசமான ஓர் அறிவிப்பாகும்.

நாங்கள் பிள்ளைகளுடைய கல்வியில் அக்கறையாக இருக்கின்றோம். எத்தகைய பயங்கரமான சூழ்நிலைகளிலும் [illegible]யூட்டியவர்கள் நாங்கள்.

ஒட்டுமொத்த மக்களையும் வீதிகளில் வரிசைகளில் வைத்திருக்கின்றது இந்த அரசாங்கம். இந்தச் சூழ்நிலையில் மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய மன நிலையில் ஆசிரியர்களோ அல்லது கற்கக் கூடிய மனநிலையில் மாணவர்களோ இல்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அன்றாட உணவுக்கே வழி இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றபோது அந்த அவஸ்தைக்கு மாற்றீடாக மாணவர்களுக்கு மதிய போசனத்தைக் கொடுங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களுக்கு பொதுப்போக்குவரத்தை இலவசமாக்குங்கள் என்று பல்வேறு விதமான கோரிக்கைகளை முன்வைத்த போது அரசாங்கம் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை. மாறாக தாங்கள் எடுத்த கொள்கையிலிருந்து மாறாது பாடசாலைகளில் 3 நாள்கள், 5நாள்கள் நடத்துங்கள் என்று சொல்லுவது வேதனை அளிக்கின்றது.

எரிபொருளுக்காகத் தீர்வு கிடைக்கும் வரை நாளை திங்கள் முதல் நாங்கள் யாருமே பாடசாலைக்குச் செல்லமாட்டோம். இது உறுதியான அறிவிப்பு.

இதனை மத்திய கல்வி அமைச்சருக்கும் கல்வி அமைச்சின் செயலருக்கும், மாகாணங்களின் கல்வி அமைச்சின் செயலர்களுக்கும், மாகாணங்களின் பணிப்பாளர்களுக்கும் வலயங்களின் பணிப்பாளர்களுக்கும் நாங்கள் தெளிவாக அறிவித்திருக்கின்றோம்.

இந்த அறிவித்தலை மாகாண செயலர்கள், மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் கூட புரிந்துகொண்டு நடக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றோம்.

மதிக்கப்பட வேண்டிய ஆசிரியர்கள், வரிசைகளில் காத்திருந்து பலருடன் சிக்கலுக்கு உட்பட்டு அவமானப்பட்டு வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

எங்களுடைய ஆதங்கத்தை அரசாங்கத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தி நாளை முதல் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எவருமே பாடசாலைக்குச் செல்லாது வீட்டிலிருந்து அல்லது எங்களுடைய அத்தியாவசிய தேவை நிமித்தம் அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பணிகளில் ஈடுபடுவோம் - என்றுள்ளது. (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 லட்சம் கடவுச்சீட்டு விநியோகம் 70 ஆயிரம் பேரே வெளியேறினர்!

கொழும்பு, ஜூன் 26

நாட்டில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை 4 லட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை 70 ஆயிரம் பேர் மாத்திரமே வெளிநாடு சென்றுள்ளனர் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவையூடாக ஆயிரம் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களும், சாதாரண சேவையின் கீழ் 800 வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களும் விநியோகிக்கப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் முதல், வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் பெருந்திரளானோர் பிரவேசித்துள்ளனர் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# டொலரால் ஆபத்து

பொதுமன்னிப்புக் காலத்தின் இறுதியில், மேலதிக வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருப்பர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற நபரொருவரால் உடைமையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத் தொகையை 15 ஆயிரம் டொலரிலிருந்து 10 ஆயிரம் டொலர் அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகைக்குக் குறைத்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 16ஆம் திகதி வெளியிடப்பட் டது.

இந்தத் தொகைக்கு மேலதிகமான வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்ற, இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற நபர்களுக்கு கடந்த 16ஆம் திகதி முதல் செயற்படத்தக்கவாறு 14 வேலை நாள்களைக்கொண்ட பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியின் இறுதியில் மேலதிக வெளிநாட்டு நாண யத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஆள்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிமை தங்களுக்கு உண்டு என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)


## மருந்தாளர் (Pharmacist) தேவை

சாவகச்சேரியில் உள்ள City Medicals மருந்தகத்திற்கு, இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் மருந்தாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகட்கு:- 077 734 7578

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் மிக்சர் தொழிற்சாலை ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

076 3741542, 076 88 38 123

## வீடு வாடகைக்கு உண்டு

239/1 பிறவுண் றோட் யாழ்ப்பாணம். 4 அறைகள் 2 விசாலமான கோல், குளியலறை, வாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.
குறிப்பு:- வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள் விரும்பத்தக்கது.

076 117 7847, 075 214 4404

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, பிரதான வீதியிலிருந்து 100 m தூரமுள்ள ஒரு பரப்பும் பதினாறு குளியும் (முதலாம் துண்டு) மற்றும் (இரண்டாம் துண்டு) ஒரு பரப்பும் பன்னிரண்டு குளியும் விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பின் விலை ஒரு கோடி அறுபது லட்சம் ரூபாய் ஆகும்.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 390 2994

## புதிய வகுப்புக்கள்

6 - 11 வரையான மாணவர்களுக்கான
வரலாறு ,புவியியல்
10, 11 மாணவர்களுக்கான
வணிகக்கல்வியும் கணக்கீடு
குழு வகுப்புக்கள் மற்றும் தனிவகுப்புக்கள்

தொடர்புகளுக்கு:- 077 283 3632

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - G.C.E. O/L - A/L
Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்
GCE O/L English Literature

K.Ganesh B.A 077 766 8725

## காணி விற்பனைக்கு

தாவடி வடபத்திரகாளி அம்மன் கோவில் J/192 கிராம சேவையாளர் காரியாலயத்திற்கு அருகாமையில் உள்ள காணியும் காணியுடன் கூடிய வீடுமாக நான்கு பரப்பும் ஆறு குளியும் கொண்டதுமான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை இரண்டு கோடியே எண்பது லட்சம் ரூபாய் ஆகும்.விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 321 5353

## தேவை

பழுது அடைந்த எலக்ரிக் சைக்கிள் (Electric Cycle, Motor Cycle) A/C, கொம்பியூட்டர்கள், லப்டப்கள் (Computer, Laptop) ஆகியன உங்கள் இடத்திற்கு வந்து விலைக்கு வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 397 3166

## காணி விற்பனைக்கு

மிருசுவில் A-9 றோட்டில் இருந்து 500 மீட்டர் ஒழுங்கையில் 70 பரப்பு வெறும் காணி செம்மண் நிலப் பரப்பு 5 லட்சம் விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 247 4740,074 172 3158

## வேலையாட்கள் தேவை

யாழ்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாள், கல் அறுக்கக் கூடியவர்கள் மற்றும் Spray Painting செய்யக்கூடிய பெயின்ரர் தேவை

தொடர்புகளுக்கு:- 077 7770969, 077 592 5371

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீட்டொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

076 128 3990

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரி சங்கத்தானையில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. போதிய சம்பளம் வழங்கப்படும்.

(CS 45325) (3/6)

076 768 5307, 076 231 4422

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் A-9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A-9 வீதியை முகப்பாகக் கொண்டது.
- 4 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகனக்காட்சியறைகள் அமைப்பதற்கு உகந்த இடம்
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு 074 2690 854, 076 658 3621

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியிலிருந்து இரண்டாவது காணி இரு வழிப்பாதையுடன்
- கைதடிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்
- ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் மட்டும்.

பார்வையிடும் நேரம் :
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
076 2611 282

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் 18 அடிப்பாதையுடன்
- நல்ல இயற்கைச் சூழல், நல்ல தண்ணீர்
- 1 பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபா (400000)
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு
074 2913 726
074 2913 727


## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 05 . 1983



இறப்பு 24 . 06 . 2022

### திரு.யூகராசா சதீஸ்ராஜ்

**(உரிமையாளர் - சதீஸ் ஸ்ரூடியோ, இணுவில்)**

கே.கே.எஸ் வீதி, இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யூகராசா சதீஸ்ராஜ் கடந்த (24.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யூகராசா அனுசியாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், றம்சியாவின் (பரந்தன்) பாசமிகு கணவரும், கமலகாந்தன் சங்கமித்தா (பரந்தன்) தம்பதியரின் அன்பு மருமகனும், திபிஷ்ணு (யா/உடுவில் மகளிர் கல்லூரி-மாணவன்), பிரணீஷ் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கமல்ராஜ் (பிரான்ஸ்), சஜித்தா (கனடா), ஜானுராஜ் (பிரான்ஸ்), கோகுல்ராஜ், சஜீவினி (பிரான்ஸ்), புவிதராஜ், இன்பராஜ் ஆகியோரின் பாசமிகு அண்ணனும், முகுந்தன் (கனடா), ஷாலினி (இலங்கை) அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு இணுவில் கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் கிழக்கு,**
**இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**தொ.இல - 077 171 4414**
**(சதீஸ் ஸ்ரூடியோ)**

(CS 19831) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இறைவனின் வாகனம் என்றான் நாயை
அவதாரம் என்றான் பன்றியை
இறைவனே என்றான் குரங்கை

இவனே திட்டினான் என்னை
நாயே! பன்றியே! குரங்கே!

கவிஞர் காசி ஆனந்தன்

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆனி 12 ஞாயிற்றுக்கிழமை (26.06.2022) சிகரம் : 105

○ நிலாந்தன்

# தமிழ் அரச நிர்வாகிகளின் கவனத்துக்கு ....!

பாலிஹகார, முன்பு வட மாகாண ஆளுநராக இருந்தவர். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவர். இவர் தமிழ்ப் பகுதிகளில் உள்ள நிர்வாகக்கட்டமைப்பின் வினைத்திறன் குறித்து உயர்வான அபிப்பிராயத்தைக்கொண்டிருந்தார் என்று தெரிய வருகிறது. 'போர்க்காலத்தில் மிக நெருக்கடியான ஒரு சூழலில் நிர்வாகம் செய்து பழகிய தமிழ் அதிகாரிகளிடமிருந்து முழு நாடும் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று அவர் கூறுவாராம்.

அதில் உண்மையும் உண்டு. நெருக்கடியான காலகட்டத்தில் இரண்டு நிர்வாகங்களுக்கு இடையே செயற்படுவது என்பது கயிற்றில் நடப்பது போன்றது. மூத்த தமிழ் நிர்வாகிகள் பலரிடம் அந்த ஆற்றல் இருந்தது. ஆனால் அண்மை நாள்களாக தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் எரிபொருள் வரிசைகளை வைத்துப் பார்த்தால் அப்படியான நிர்வாகத் திறமை எங்கே போனது என்று கேட்கத் தோன்றுகிறது.

இது நாடு முழுவதற்குமான ஒரு தோற்றப்பாடு. இதில் தமிழ்ப் பகுதியை தனித்துப்பார்க்க முடியாது என்று ஒரு விவாதம் முன்வைக்கப்படலாம். ஆனால் டெல்டா திரிபு வைரஸ் நாடு முழுவதையும் தாக்கிய போது தமிழ்ப்பகுதிகள் ஒப்பீட்டளவில் ஸ்திரமாக காணப்பட்டன. இறப்பு வீதமும் ஒப்பீட்டளவில் தமிழ்ப் பகுதிகளில் குறைவு என்று கூறப்படுகிறது. யுத்தமும் வைரஸும் ஒன்று அல்ல என்பதனை ராஜபக்சக்களுக்கு உணர்த்திய ஒரு நெருக்கடி அது. டெல்டா திரிபு வைரஸின் தாக்கத்தின்போது தமிழ்ப்பகுதிகளில் மருத்துவ சுகாதாரக் கட்டமைப்புக்கள் இயங்கிய விதம் முன்பு யுத்த காலகட்டத்தில் கிடைத்த அனுபவத்தின் விளைவு என்றும் எடுத்துக் கொள்ளலாமா?





ஒருபகுதியினர் வரிசைகளில் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள். ஒரு பகுதியினர் திரும்பத் திரும்ப எரிபொருளை மீள நிரப்புகிறார்கள். அதை ஒரு குழுவாகத் திட்டமிட்டு வியாபாரமாகச் செய்கிறார்கள். அந்த எரிபொருள் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் 1000 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது. நிர்வாகம் சீர்குலைந்தால் கள்ளச் சந்தையும் பதுக்கலும் தலைவிரித்தாடும்.

இவ்வாறாக அனர்த்த காலங்களின்பொழுது, தமிழ் மக்களின் கூட்டு உளவியலும் சரி, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நிர்வாக கட்டமைப்புகளும் சரி, முன்னைய யுத்த கால அனுபவத்தை அடியொட்டி சிறப்பாகச் செயற்பட முடியும். ஏனென்றால் இந்தப் பூமியிலே யாருக்கும் கிடைக்காத நூதனமான அனுபவங்கள் தமிழ் மக்களுக்கு கிடைத்திருந்தன. இந்தப்பூமியிலேயே யாரும் அனுபவித்திராத துன்பங்களை தமிழ்மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். நவீன வரலாற்றில் மரணத்தின் ருசியை மிகத்தெரிந்த மக்கள் கூட்டங்களுக்குள் தமிழ் மக்களும் அடங்குவர். மரணத்தோடு நீண்டகாலம் உரையாடிய மக்கள் அவர்கள். மரணத்துள் வாழ்ந்து தப்பிப் பிழைத்த மக்கள் அவர்கள். அதாவது சாவினால் சப்பித் துப்பப்பட்ட மக்கள். ஓர் இனப்படுகொலையில் தப்பிப்பிழைத்தவர்கள். தமிழ் அதிகாரிகள் போரிலீடுபட்ட இரண்டுதரப்புக்களுக்கும் இடையே 'சான்ட்விச்' ஆக்கப்பட்டவர்கள். இந்தக்கூட்டு அனுபவங்களின் ஊடாகவே தமிழ் மக்கள் எந்தவொரு நெருக்கடியையும் எதிர்கொள்வார்கள்.

யூதர்களின் வரலாற்றைக் கூறும் எக்சோடஸ் என்றழைக்கப்படுகின்ற நாவலில் அதன் ஆசிரியர் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும்போது இவர் இந்த பெயருடைய நாசி வதைமுகாமின் பட்டதாரி என்று அறிமுகப்படுத்துவார். அதாவது நாசி வதை முகாம்களில் இருந்து தப்பிய ஒவ்வொரு யூதரும் பட்டப்படிப்புக்கு நிகரான அனுபவங்களை கொண்டிருந்தனர் என்று பொருள். இது தமிழ் மக்களுக்கும் பொருந்தும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை எல்லா இடப்பெயர்வுகளும் புலப்பெயர்ச்சிகளும் அவர்களுக்குப் பட்டப்படிப்புகள்தான். எல்லாக் கூட்டுக் காயங்களும், கூட்டு மனவடுக்களும் சித்திரவதைகளும், அகதிமுகாம்களும் நலன்புரி நிலையங்களும் அவர்களைச் செதுக்கின. இப்படிப் பார்த்தால் இந்தப் பூமியிலேயே மிகக்கொழுத்த அனுபவங்களைக் கொண்ட மக்கள். இப்படியான அனுபவத்தைக் கொண்ட ஒரு சமூகம் இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையின்போது எப்படிச் செயற்பட வேண்டும்?

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவ்வளவு தான் எரிபொருள் உண்டு என்றால் அந்த அடிப்படையில் வாகனங்களை முதலில் பதிவு செய்து, டோக்கன் கொடுத்து, ஏதோ ஒரு முறைமையின் கீழ் எரிபொருள் விநியோகத்தை கொண்டு வரலாம் தானே? ஏன் இப்படி நாள்கணக்காக வாகனங்களையும் சாரதிகளையும் தெருவோரங்களில் நிறுத்தி வைக்க வேண்டும்?

எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களில் ஒரு பகுதியினரைப் பார்த்தால், ஓர் இனப்படுகொலையில் இருந்து கற்றுக்கொண்ட மக்களாகத் தெரியவில்லை. ஒரு பகுதியினர் வரிசைகளில் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள். ஒரு பகுதியினர் திரும்பத் திரும்ப எரிபொருளை மீள நிரப்புகிறார்கள். அதை ஒரு குழுவாகத் திட்டமிட்டு வியாபாரமாகச் செய்கிறார்கள். அந்த எரிபொருள் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் 1000 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது. நிர்வாகம் சீர்குலைந்தால் கள்ளச் சந்தையும் பதுக்கலும் தலைவிரித்தாடும். யார் அதைக் கட்டுப்படுத்துவது? தெற்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் பொறுமையிழந்து மோதலுக்கு போனால் அதை பொலிஸ் கட்டுப்படுத்துகிறது. ஆனால் வடக்கில், விசுவமடுவில் அதை இராணுவம் கையாண்டிருக்கிறது.

எரிபொருள் வரிசைகள் மட்டுமல்ல, கடந்த வாரம் பாடசாலைகளை இயக்குவது தொடர்பிலும் அவ்வாறான குழப்பத்தைக் காணமுடிந்தது. இங்கு முதலில் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அன்றாட வாழ்வின் அசைவுகளை மட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. எனினும் தனியார் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக கல்விப் பொது சாதாரணம், உயர்தரம் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் போன்ற தேசிய பரீட்சைகளுக்கான தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குகின்றன. அவற்றை நோக்கி ஆயிரக்கணக்கில் தமது பிள்ளைகளை பெற்றோர் மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி இறக்குகிறார்கள். ஒரு நண்பர் பகிடியாக சொன்னார், 'பெற்றோல் கியூவில் நிற்கும் ஒரு பகுதியினர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காகத்தான் எரிபொருளைச் சேமிக்கிறார்களா?' என்று. அரசாங்கம் மாறி மாறி அறிக்கைகளை விடுகின்றது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்த பின்னரும்கூட நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று உண்டா? என்று கேட்குமளவுக்குத்தான் நிலைமை தொடர்ந்தும் காணப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் குழம்பிப் போனதால் நிர்வாக அதிகாரிகளும் குழம்பிப் போனார்கள். நிர்வாகக் கட்டமைப்பும் குழம்பி போய் விட்டது, என்று ஒரு விளக்கத்தை தரமுடியும்.

கடந்த வாரம் பாடசாலைகளைத் திறப்பதா? இல்லையா ?என்ற விடயத்தில் முடிவெடுக்க முடியாத ஒரு நிலைமை காணப்பட்டது. முதலில் பாடசாலைகளை குறிப்பிட்ட காலகட்டத்துக்கு மூடப்போவதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அது மேல் மாகாணத்துக்கு மட்டுமே பொருந்தும் என்றும், ஏனைய மாகாணங்களுக்கு பொருந்தாது என்றும் பின்னர் தெளிவுபடுத்தப்பட்டது. அதேசமயம் கிட்ட உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்கலாம் என்று கூறப்பட்டது. மேலும் இணைய வழியிலும் வகுப்புகளை நடத்தலாம் என்று கூறப்பட்டது. அதாவது 'ஹைபிரிட்' முறைமை. முடிவில் அதிபர்கள் தற்துணிவாக முடிவெடுக்க லாம் என்று கூறப்பட்டது.

ஆனால் இப்போதுள்ள நிர்வாகக் கட்டமைப்பில் நெருக்கடிக்குள் 'ரிஸ்க் 'எடுத்து துணிவாக முடிவெடுக்க எத்தனை அதிபர்கள் தயார்? அவ்வாறு 'ரிஸ்க்' எடுத்து முடிவெடுக்கக்கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு நாட்டில் உண்டா? துணிந்து முடிவெடுக்கும் அதிபர்கள் அதன் விளைவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் எத்தனை பேருக்கு பதில் சொல்ல வேண்டும்? கல்வித் திணைக்களம், பெற்றோர், பழைய மாணவர் என்று எல்லாத் தரப்பும் அதிபரைத் தான் பிடுங்குவார்கள். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அதிபர் பின்வருமாறு முகநூலில் எழுதியிருந்தார்,

"நினைச்சு நினைச்சு கலியாணம் முடிக்கிறாங்கள். என்னெண்டு பிரயோக முடிவுகளை எடுப்பது? சீ!".

இதுவிடயத்தில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் மட்டும் குழம்பிப் போயிருந்தன என்பதல்ல, ஊடகங்களும் குறிப்பாக இணையவழி ஊடகங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு நிலைமையைக் குழப்பின என்பதை

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரியும் இரட்டை இலை?

○ மயூ

தமிழகத்தின் மாபெரும் கட்சியாகக் கட்டியெழுப்பப் பட்டிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் இப்போது இரு பிரிவுகளாக முட்டி மோதிக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.கவின் பொதுச் செயலருமான செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் சரிவைச் சந்திருந்திருந்த இந்தக் கட்சி, இப்போது யார் தலைமை? என்று கன்னை பிரிந்திருக்கின்றது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரில் யார் கட்சிக்கு தலைவர்? என்ற பிரச்சினை பூதாகரமாகியிருந்தது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற பதவிகளைத் தங்களுக்கு உருவாக்கி எடப்பாடியும், பன்னீர் செல்வமும் அடுத்தவரை எப்போது தள்ளிவிடலாம் என்றவாறே செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் இந்தப் புகைச்சல் பற்றியெரிய ஆரம்பித்தது. அது கடந்த 14ஆம் திகதி நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் பட்ட வர்த்தனமாகவே வெளிப்பட்டது. அந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலர்கள் கிளப்பிவிட்ட ஒற்றைத் தலைமைத் தீப்பொறி இப்போது காட்டுத் தீயாகப் எரிய ஆரம்பித்திருக்கின்றது. கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமிக்கும் ஆதரவாகக் களமிறங்கி பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமைக்கான தீர்மானம் நிறைவேற்றத் தயாராக உள்ளனர். ஆனால் ஏற்கனவே பேசிமுடிவெடுக்கப்பட்ட 23 தீர்மானங்களைத் தவிர வேறு எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக் கூடாது என ஓ.பி.எஸ். தரப்பு நீதிமன்றத்தில் தடை வாங்கியது.

கடந்த 23 ஆம் திகதி, வானகரம் ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில், ஏற்கனவே பேசி முடிவெடுக்கப்பட்ட 23 தீர்மானங்களையும் பொதுக்குழு நிராகரிக்கின்றது என்று அறிவித்தார் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம். தொடர்ந்து, ஒற்றைத் தலைமை தீர்மானத்தோடு இந்தத் தீர்மானங்கள் சேர்த்து நிறைவேற்றப்படும் என்றார். பொதுக்குழு எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் எனவும் அப்போதே அறிவிக்கப்பட்டது. இரு தரப்புகளும் இந்த விடயத்தில் நீதிமன்றத்தை நாடும் நிலைமை இருப்பதால், எதிர்வரும் நாள்களில் பதவிப் போட்டி, களை கட்டும் என்பதில் ஐயமில்லை

அ.தி.மு.கவில் நடக்கும் இந்தக் குத்துவெட்டுக்களால் தமிழக அரசியல் பரபரப்பாகியிருக்கின்றபோதும், ஆளும் தி.மு.கவுக்குப் பெரும் மகிழ்ச்சியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# களியாட்டமற்ற கால்பந்தாட்டம்

○ ஆர்.லயனல்

ஒலிம்பிக் தொடர், உலகக்கிண்ண கால்பந்தாட்டம் இவ்விரண்டும்தான் விளையாட்டுலகில் ஆகப்பெரும் தொடர்கள். வெற்றி, தோல்வி என்ற முடிவுகளுக்கு அப்பால் ஏகப்பட்ட விடயங்கள் இந்தத் தொடர்களுடன் ஒன்றித்திருக்கும். அதேநேரம் இந்த இரு தொடர்களுக்கும் மைதானத்துக்கு அப்பாற்பட்ட மறுபக்கம் ஒன்றுள்ளது. கேளிக்கைகளால் நிறைந்தது அந்தப் பக்கம்.

ஒலிம்பிக் தொடர், கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் என்பனவற்றின் வெற்றி, தோல்விகள் எந்தளவுக்குப் பேசு பொருள் ஆகின்றனவோ அதே அளவுக்கு கும்மாளங்கள், களியாட்டங்கள் என்பனவும் இந்தத் தொடர்களில் நிறைந்திருக்கும். இந்தத் தொடர்களை நடத்தும் நாடு, தொடரை நடத்தும் காலப்பகுதியில் பாதுகாப்பான பாலுறவுக்காக ஆணுறைகளை அதிகளவில் இறக்குமதி செய்து குவிக்கும். ஆனால், இந்த நீண்ட நெடிய 'களியாட்டக் கலாசாரத்துக்கு' முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றது கட்டார்.

### கட்டுப்பாடுகளுடன் கால்பந்தாட்டமா?

கட்டாரில் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி வரை கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் ரசிகர்களின் அளவுகடந்த களியாட்டங்களுக்குத் தடை விதித்துள்ளது கட்டார்.

கால்பந்தாட்ட முடிவுகளை வைத்து மேற்கொள்ளப்படும் மைதானத்துக்கு அப்பாற்பட்ட மதுவிருந்துகள், கேளிக்கைகள், தம்பதியினரைத் தாண்டிய பாலுறவுகள் என்பனவற்றை இந்த வருட உலகக்கிண்ணப் பருவகாலத்தின்போது கட்டாரில் மேற்கொள்ள முடியாது என்ற உத்தரவு அந்த நாட்டு அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த நாட்டில் திருமண உறவை கடந்து பிற நபர்களுடன் பாலியல் உறவுகொள்வது கடுமையான குற்றமாகப் பார்க்கப்படுகிறது. அதனைத் தடுக்கும் வகையில் கடுமையான சட்டங்களும் கட்டார் நாட்டில் நடைமுறையில் உள்ளது. கட்டாரில் வசிக்கும் மக்கள் இந்தச் சட்டதிட்டங்களைப் பின்பற்றி வருகின்றனர். தற்போது உலகக் கோப்பை தொடருக்காக கட்டார் செல்லும் மக்கள் அந்த விதிகளை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகி உள்ளது. அந்த நாட்டின் சட்டத்தின்படி திருமண பந்தத்தை மீறி பாலியல் உறவு கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படுமாம். ஆனாலும் சமயங்களில் அந்தத் தண்டனை ஏழு ஆண்டுகள் வரை கூட இருக்கும் என தன்னார்வ அமைப்பு ஒன்று தகவல் தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் கட்டாரில் வழமையாக இருக்கும் இந்தச் சட்டங்கள், கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரைக் காரணம்காட்டி விலக்களிக்கப் படாது என்றவாறாக அமைந்துள்ளது அந்த நாட்டு அரசாங்கத்தின் உத்தரவு.

### தொடரும் சர்ச்சை

2022 ஆம் ஆண்டின் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தைக் கட்டார் பெற்றிருந்தாலும், அந்த நாட்டால் தொடரை வெற்றிகரமாக நடத்த முடியுமா? 'ஐரோப்பிய ரசிகர்களின்' சுதந்திரம் பேணப்படுமா? என்ற கேள்விகள் கடந்த நான்கு ஆண்டுகளாக இருக்கவே செய்தன.

இந்தச் சந்தேகங்களுக்கு தனது உச்சத் தொழில்நுட்பத்தால் இதுவரை கட்டார் நல்லபடியாகவே பதில் வழங்கிக் கொண்டிருந்தது. பாலைவன தேசத்தில், அதுவும் 42 டிகிரி வெப்பநிலையில் எவ்வாறு வீரர்கள் விளையாடுவார்கள்? என்ற கேள்விக்கு உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய மிகப்பிரமாண்டமான மைதானங்களை அமைத்து வியக்கவைத்தது.

ரசிகர்கள் மற்றும் வீரர்கள் தங்குவதற்கு ஒலிம்பிக் கிராமங்களைப்போன்ற நகரங்களை உருவாக்கி அசத்தியது. ஆனால், தன் கலாசாரத்தில் இம்மியும் விட்டுக் கொடுக்க கட்டார் தயாரில்லை.

தற்போது கட்டார் உலகக்கிண்ணம் ஐரோப்பிய கால்பந்தாட்ட ரசிகர்கள் மற்றும் கட்டார் அரசாங்கம் என்ற இரு தரப்பினருக்கிடையே ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்கே உரித்தான களியாட்டக் கலாசாரத்தை ஐரோப்பிய ரசிகர்கள் விட்டுக் கொடுக்கப் போகின்றனரா? அல்லது கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்காகவும் அதன் வருவாய்க்காகவும் கட்டாரின் கலாசாரத்தை அந்த நாட்டு அரசாங்கம் விட்டுக்கொடுக்கப்போகின்றதா? இன்னும் சில வாரங்களில் பதில் கிடைக்கும்.




# தமிழ் அரச நிர்வாகிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஒரு செய்தியின் மூலத்தை விசாரிக்காமல் பரபரப்புக்காக செய்திகளைப் போடும் ஒரு போக்கை சமூக வலைத்தளங்கள் வளர்த்துவிட்டிருக்கின்றன. இதனால், உண்மையை விட வதந்தியே அதிகம் பரவலாகச் சென்றடைகிறது. இது கடந்த ஞாயிற்றுக்கிழமையும் நடந்தது. அன்றைக்கு பதினொரு மணியளவில் அடுத்த நாள் பாடசாலைகள் இயங்காது என்று இணைய ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்தன. ஆனால் சுமார் அரை மணித்தியால இடைவெளிக்குள் அந்தச்செய்தியை அதே ஊடகங்கள் மறுத்தன. நாட்டைக் குழப்புவதில் உறுதிப்படுத்தப்படாத செய்திகள், அல்லது பரபரப்புச் செய்திகளுக்கும் ஒரு பங்கு உண்டு. குறிப்பாக பொருள்கள் பதுக்கப்படுவதற்கும் விலைகள் உயர்வதற்கும் பரபரப்புச் செய்திகளும் ஒரு விதத்தில் காரணம். ஓர் அனர்த்த காலத்தில் மக்களைக் குழப்பாமல் இருக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உண்டு.

அத்தியாவசிய சேவைகளுக்குரிய நிர்வாகக் கட்டமைப்பின்படி நாட்டின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு கீழ் ஒவ்வொரு மாவட்டச் செயலரும் பதவி வழியாக பிரதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராகச் செயற்பட முடியும். அதாவது மாவட்டச் செயலர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக முடிவெடுக்கத் தேவையான முழு அளவு அதிகாரம் உண்டு. அவர்கள் தமது மக்களுக்காக 'ரிஸ்க்' எடுக்கத் தயாராக இருந்தால் சரி. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றங்கள் இல்லை. இதனால் கொழும்பினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் நிர்வாகக் கட்டமைப்பே உண்டு. இதுவும் தமிழ் நிர்வாகிகளின் சுயாதீனத்தை கட்டுப்படுத்துகிறது.

இவ்வாறான ஒரு நிர்வாகச் சூழலில் ஆளுநர் ஒருவரின் கூற்றில் தொடங்கிய இந்தக் கட்டுரையை மற்றொரு ஆளுநரின் அறிவிப்பில் முடிக்கலாம் என்று நினைக்கிறேன். சில நாள்களுக்கு முன் ஒரு மாகாண ஆளுநரின் அறிவிப்பு ஒன்றை ஊடகங்களில் பார்க்க முடிந்தது. எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் மணிக்கணக்காக காத்திருக்கும் மக்களுக்கு உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இயன்றவரை நீராகாரத்தை வழங்குமாறு ஆளுநர் கேட்டிருக்கிறார். அது ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஒரு மாகாண ஆளுநர் அதைவிடக்கூடுதலாகச் செய்யவேண்டிய ஒரு வேலை இருக்கிறது. எரிபொருள் வரிசைகளை எப்படிப் புத்திபூர்வமாக ஏதோ ஒரு முறைமைக்குள் கொண்டு வரலாம் என்று சிந்திப்பதே அது. பதவி வழி அதிகாரமுடைய நிர்வாகிகள் துணிந்து 'ரிஸ்க்'எடுக்க வேண்டிய ஒரு காலகட்டம் இது. தமிழ் அதிகாரிகள் மதிப்புக்குரிய, முன்னுதாரணம்மிக்க இறந்தகால அனுபவங்களைப் பின் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா. துவாரகன்

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: சில குறிப்புக்கள்

## மருத்துவர் ஜோன் ஸ்கடர்





> மருத்துவர் ஸ்கடர் பண்டத்தரிப்பில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளுக்கும் தீவுகளுக்கும் மருந்துகளையும் சத்திரசிகிச்சை உபகரணங்களையும் தம்முடன் எடுத்துச் சென்று நோய்களைக் குணப்படுத்தினார்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் பண்டத்தரிப்பிலே மருத்துவர் ஸ்கடர் பணியாற்றிய மருந்தகம் (டிஸ்பென்சரி) பனைமரங்கள், நெல் வயல்கள் சூழ்ந்த பசுந்தரையில் அமைந்துள்ள தீவு போன்றே காட்சியளித்தது. நோயாளர்கள் வந்து செல்லும் சிகிச்சை நிலையமாக மட்டுமன்றி. அவர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறும் மருத்துவமனையாகவும் ஸ்கடரது மருந்தகம் இயங்கியது. ஸ்கடர் அதிகமானவர்களுக்குச் சிகிச்சையளிக்கவல்ல பெரியதொரு மருத்துவமனையை நிறுவுவதற்கு விரும்பினார். திருமதி ஸ்கடர் தனது பிள்ளைகளுடன் அநாதரவான யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளுக்கும் (40 பிள்ளைகள்) தமது இல்லத்தில் அடைக்கலம் கொடுத்து அவர்களுக்கும் கல்விபுகட்டி வந்தார். ஸ்கடர் குடும்பத்துடன் அமெரிக்காவிலிருந்து வந்த பணிப்பெண் அமி இந்தப்பிள்ளைகளைப் பாரமரிக்க ஆற்றிய பங்களிப்பு விலைமதிப்பிட முடியாதது. அமி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முதல் ஆபிரிக்க அமெரிக்கராக கருதப்படுகிறார். தொற்றுநோய்களுக்குரிய விசேட மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தொற்று நோய் ஏற்பட்ட காலங்களில் நோயாளர்களைத் தனிமைப்படுத்தியும் உரிய முறையிற் பராமரித்துமே தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தியிருந்தனர். ஸ்கடருக்கு மருத்துவமனையிலே உதவியாக இருந்தவர் அவரது மனைவியான ஹரியற் வோட்டர்பரி ஸ்கடர். யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் பரவியபோது திருமதி ஸ்கடர் கணவனுடன் இணைந்து நோயாளிகளைப் பாரமரிப்பதிலும் அவர்களைக் குளிப்பாட்டுவதிலும் இறந்தவர்களது சடலங்களைப் புதைப்பதிலும் பேருதவியாக இருந்தார். நோய்வாய்ப்பட்டவர்களது துன்பங்களைப் போக்குவதில் தங்களால் இயன்ற அனைத்தையும் இந்தத்தம்பதியினர் ஆற்றினர்.

**மருத்துவர் ஸ்கடரது சத்திர சிகிச்சை பற்றிய குறிப்புக்கள்:**

புதன்கிழமை, சனவரி 10 ஆம் திகதி இன்று காலை ஒருவருடைய உடலின் ஒரு பக்கத்தில் வளர்ந்திருந்த கட்டியை சத்திர சிகிச்சை செய்து அகற்றினேன். கிட்டத்தட்ட ஒரு அடி நீளமானதாக இருந்தது. நான் சத்திர சிகிச்சை செய்து அகற்றிய கட்டிகளில் இதுவே மிகப் பெரிதாக இருந்தது.'

மயக்கமருந்துகள். குருதி மாற்றீடு, நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் அறிமுகமாகாத அக்காலத்தில் அவர் மேற்கொண்ட ஒரு சத்திரசிகிச்சை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். '12 வயதுச் சிறுமி ஒருவரது பின்புறம் வளர்ந்திருந்த 2 கட்டிகளை அகற்ற வேண்டியிருந்தது. 8 அங்குல ஆழமான கீறலை ஏற்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொண்டபோதும் அந்தச்சிறுமி சத்திரசிகிச்சை நடைபெற்ற காலப்பகுதியில் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்.'

முறிந்த எலும்புகளைப் பொருத்துதல், காயங்களைக் குணப்படுத்துதல், கண்புரை அறுவைச் சிகிச்சை முதலான சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டமையை அவரது சத்திரசிகிச்சைக் குறிப்புக்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இன்று 70 வயதுடைய நபர் ஒருவருக்கு கண்புரை நோய்க்கான சத்திரசிகிச்சையை மேற்கொண்டேன்; அவருக்கு மீண்டும் கண்பார்வை கிடைத்தது.

**சாகரம் தாண்டி சவால்களை எதிர்கொண்டு ஆற்றிய தொண்டு**

வட அமெரிக்காவிருந்து பாய்மரப்படகில் உயிரைப் பணயம் வைத்து, பல மாதங்கள் பயணஞ் செய்து, பல்லாயிரம் மைல் கடந்து, ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று பிற இனத்தவர்கள் மத்தியில் பணியாற்றிய மிசனரித் தொண்டர்கள் இறைவன் மீது கொண்ட பக்தி விசுவாசத்தாலும் கிறிஸ்துவினது போதனைகள், சிலுவைப்பாடுகளால் திடவைராக்கியம் பூண்டு அன்பின் நிமித்தம் பல்வேறு துன்பங்களைத் தாங்கிக் கொண்டார்கள்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டம் பெற்று அனைத்து வசதிகளும் நிறைந்த நகரத்தை விட்டு, பெற்றோரை உடன்பிறந்தோரைப் பிரிந்து, எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டு, சுகாதாரத்தில் பின்தங்கியிருந்த ஆசியநாட்டுக்கு வருகை தந்து சேவையாற்றிய அமெரிக்க மருத்துவ மிசனரியினரது பணி போற்றுதற்குரியது.

மருத்துவர் ஸ்கடர், திருமதி ஸ்கடர் மற்றும் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு சோதனைகளையும் துன்பங்களையும் இறையன்பின் நிமித்தம் எதிர்கொண்டனர். மருத்துவர் ஸ்கடர் பண்டத்தரிப்பில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளுக்கும் தீவுகளுக்கும் மருந்துகளையும் சத்திரசிகிச்சை உபகரணங்களையும் தம்முடன் எடுத்துச் சென்று நோய்களைக் குணப்படுத்தினார். நவீன போக்குவரத்து சாதனங்கள் எவையுமே அறிமுகமாகாத காலத்தில், பாதைகள் அமைக்கப்படாத இடங்களுக்கு குதிரை வண்டியிலும் நடந்து சென்றுமே சிகிச்சையளித்தார்.

உடலில் ஏற்படும் நோய்க்கு சிகிச்சை அளித்து ஒரு மனிதனைக் குணப்படுத்துவதே ஆகவும் சிறந்த ஆன் மிகப் பணியெனவும் அதுவே ஆன்மாவை உலகத் துன்பத்திலிருந்து விடுவிக்கும் எனவும் ஸ்கடர் நம்பினார்.

**தமிழ்நாட்டில் வேலூரில் தடம் பதித்த ஸ்கடர் தலைமுறையினர்**

பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி அமெரிக்க மிசனரிகளுக்கு இந்தியாவில் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அமெரிக்க மிசனரி சபையினர் மருத்துவர் ஸ்கடரை இந்தியாவுக்குச் சென்று பணியாற்றுமாறு கேட்டனர்.

16 வருடங்களுக்கு மேல் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய ஸ்கடர் 1836 இல் தமிழ்நாட்டுக்குச் சென்று மருத்துவ மிசன் பணியை ஆற்றினார். இந்தியாவின் முதல் மருத்துவமிசன் மருத்துவர் என்ற சிறப்பையும் ஸ்கடரே பெற்றார். அவர் தமிழ்நாட்டிலுள்ள சிந்தாதிரிப்பேட்டை யில் தன்னுடைய இல்லத்தை அமைத்துப் பணியாற்றினார்.

1842-1846 காலப்பகுதியில் அமெரிக்காவில் சிறிது காலம் தங்கியிருந்து பின்னர் தமிழகம் திரும்பி 1847 முதல் 1849 வரை 2 ஆண்டுகள் மதுரையில் மருத்துவப் பணியாற்றினார். 1849 முதல் தன்னுடைய பணியை சென்னையில்(மற்றாஸ்) இறை அழைப்பு வரும் வரை தொடர்ந்தார். உடல் நலக்குறைவு காரணமாக தென்னாபிரிக்காவுக்குப் பயணமானார்.

மேலைத்தேச மருத்துவத்தின் உன்னதத்தை உலகுக்கு அறிமுகப்படுத்த, யாழ்ப்பாண தேசத்துக்கு வந்த ஜோன் ஸ்கடர் என்ற அமெரிக்க மிசனரி மருத்துவர் அன்புப் பணியாளர், 1855 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையில் உள்ள உவின்பேர்க் என்ற இடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஸ்கடரது 7 ஆண்பிள்ளைகளும் 2 பெண் பிள்ளைகளும் இந்தியாவில் மிசன் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். ஆண்பிள்ளைகளில் ஐவர் அமெரிக்காவுக்குச் சென்று மருத்துவத்துறையில் பட்டம் பெற்று மருத்துவ மிசனரிகளாக இந்தியாவுக்கு மீளவந்து பணியாற்றினர். ஸ்கடரது 15 பேரப்பிள்ளைகளும் மிசன் பணியில் இணைந்து கொண்டனர். மருத்துவர் ஜோன் ஸ்கடர் வம்சத்தின் 4 தலைமுறைறைச் சேர்ந்த 40 பேர் இந்தியாவில் அமெரிக்க மிசனுக்காகத் தொண்டாற்றினார்கள்.



மருத்துவர் ஐடா ஸ்கடர்

மருத்துவர் ஜோன் ஸ்கடரது 13 ஆவது மழலை யாழ்ப்பாணத்திலுள்ள சாவகச்சேரி என்ற இடத்தில் 1836 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி பிறந்தது. இவரது பெயரும் ஜோன் ஸ்கடர் (இளையவர்) என்பதாகும். இவரும் மருத்துவரே. இவர் இலவ்ரா போட்டர் (சோபியா) உவில்ட் என்ற பெண்மணியைத் திருமணஞ் செய்தார். இவர்களுக்குப் பிறந்த தவப்புதல்வியே ஐடா ஸ்கடர்.

**ஐடா ஸ்கடர் என்ற இளம் பெண்ணுடைய வாழ்வை மாற்றிய நாள்**

இளவயது ஐடா ஸ்கடர் இந்தியாவில் காணப்பட்ட வறுமை, சுகாதார வசதியின்மை, மக்களிடம் காணப்பட்ட அறியாமை, நாகரிகமின்மை முதலானவற்றைக் கண்டு வெறுப்புற்றிருந்தார். இதனால் திருமணம் செய்து மகிழ்ச்சியான வாழ்வை அமைத்துக் கொள்ள விரும்பி அமெரிக்கா சென்றார்.

ஒருநாள் ஐடாவுக்கு தந்தையார் ஜோன் ஸ்கடரிடம் (இளையவர்) இருந்து ஒரு கடிதம் வந்தது. தாயார் இலவ்ரா இந்தியாவில் உடல் நலக்குறைவுடன் இருக்கும் செய்தியை அறிந்து தென் இந்தியாவுக்கு உடனே திரும்பினார்.

ஐடா ஸ்கடர் தாயாருக்கு பணிவிடை செய்துவந்த நாள்களில் ஒருநாள் மாலைப்பொழுது கையிலே விளக்குடன் ஒரு பிராமணர் இவர்களது வீட்டுக்கு வந்து வீட்டுக் கதவைத் தட்டினார். ஐடா வெளியே வந்து பார்த்தார். 14 வயது நிரம்பிய தனது மனைவி பிரசவ வேதனையால் துன்பப்படுவதாகவும் உடனே வந்து உதவுமாறும் ஐடாவிடம் இரந்து மன்றாடினார். ஐடா தான் மருத்துவர் இல்லையென்றும் தனது தந்தையார் தான் மருத்துவர் என்றும் அவரை அழைத்துவருவதாகவும் கூற, அந்த இந்தியர் தாங்கள் அந்நிய தேசத்து ஆண்கள் பிரசவம் பார்க்க அனுமதிப்பதில்லை என்று கூறி ஆற்றோணாத் துயருடன் திரும்பினார்.

அடுத்து ஒரு முகம்மதியர் வந்து தனது மனைவி பிரசவவேதனையால் இறந்து கொண்டிருப்பதாகவும் ஐடாவை உதவுமாறும் இரந்து நின்றார். ஐடா தந்தையை அழைத்துவர உள்ளே செல்ல அதற்கு அம்முகம்மதியர் இசுலாமியப் பெண்கள் வீட்டுக்கு வெளியே செல்லும் போது புர்கா அணிந்து செல்வதாகவும் ஆண்களை ஒருபோதுமே பிரசவம் பார்க்க அனுமதிக்க முடியாது என்றும் கூறித் துயருடன் அழுதவாறு திரும்பிச் சென்றார்.

அன்றைய நாள் மூன்றாவதாக இரவு வேளை ஓர் இந்துக் குடியானவர் வந்து தனது மனைவியின் பிரசவத்துக்கு உதவுமாறு ஐடாவிடம் கை கூப்பி இரந்து வேண்டுகிறார். நீங்கள் உதவாவிட்டால் மனைவி இறந்து விடுவார் என்று தொழுதார். ஐடா தந்தையார் மருத்துவர் ஜோன் ஸ்கடரை அழைத்துவரச் உள்ளே செல்ல அவரும் மறுத்து விட்டார்.

அன்று இரவு முழுவதும் ஐடா துன்பத்திலே துவண்டார். அடுத்தநாள் தூரத்திலே கேட்ட பறையொலி அவர்காதுகளில் பல நாள்களாகக் கேட்டுக்கொண்டே இருந்தது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
தொடர் கதை

# மானத்தீ



41

கருணை ரவி

பூங்கொடிக்கு காய்ச்சல் வந்து மூன்று நாட்கள். பனடோல் போட்டே வீட்டு வேலைகளைச் செய்தாள். உத்தமன் வீரச் சாவடைந்த நாளிலிருந்து தலையிடியும் காய்ச்சலும். உத்தமனின் வித்துடல் வெற்றிலைக்கடைகாரன் வீட்டில் ஒருநாள் இருந்தது. இருபது நாட்களாகியும் வெற்றிலைக்கடைக் காரன் கடைக்கு வரவில்லை. உத்தமன் வெற்றிலைக்கடைக்காரனின் மகனாக இல்லாது விட்டால், அவள் அவனின் வித்துடலோடு சென்று ஒரு தாயைப்போல துயிலும் இல்லத்தில் அவனுக்கு மண்போட்டிருப்பாள். அவளின் உணர்வை ,அவளின் விருப்பத்தை, வெற்றிலைக்க்டைகாரனின் செயல் தடுத்தது. அவனின் வித்துடல் அவளின் வீட்டுக்கருகாலே சென்றது. வீதியில் கைகள் நிறைய பூக்களுடன் நின்று அவனின் வித்துடலுக்குப் பூக்கள் போட்டதை நினைக்க அவளுக்கு ஆறுதலாக இருந்தது. அவனின் வித்துடல் வாகனம் வீதியால் போனதும் வீட்டுக்குள் வந்து அழுதாள். நித்தியை இனி எப்ப காண்பது? இனி யாரைப்பிடித்து நித்தியைத் தேடுவது? வீரச்சாவு என்றபடியால் அங்கு நிற்கும்போராளிகளிடம்அவள்நித்தியைவிசாரிக்கவில்லை. நித்தி வந்திருந்தால் வீட்டுக்கு வந்திருப்பான். ஒருகிழமைக்குப் பிறகு மீண்டும் அங்கு போய் நித்தியை விசாரிக்க வேணும் என நினைத்தாள்.

நித்தி வராதது நிருபனுக்கு கவலையாக இருந்தது. தறப்பாளில் மாட்டியிருந்த படங்கள் எல்லாவற்றையும் இன்றுதான் கழட்டினான். பள்ளிக்கூடம் போகும்போது அண்ணா மோட்டார் சைக்கிளில் கொண்டுபோய் விடுவார் என்றும் நண்பர்களுக்கு சொல்லியிருந்தான்.

"அண்ணா வந்தவரே?"

ரீச்சரும் அவனைக்கேட்டாள். அண்ணா எப்பவாவது ஒருநாள் வருவார். தன்னை மோட்டார் சைக்கிளில் பள்ளிக்கூடம் கொண்டு செல்வார் என நினைத்துக் கொண்டிருந்தான். பூங்கொடி நிருபனைக் கொண்டு ஒரு கடிதம் எழுதினாள். உத்தமனின் முகாம் பொறுப்பாளருக்கு. நித்தி கனவருசமாக வீட்டுக்கு வரவில்லை என்றும் தந்தை இறந்ததாகவும் தாங்கள் வறுமையில் மிகவும் கஷ்டப்படுகிறோம். மகனைப் பார்க்க ஆசையாக இருப்பதாக கடிதத்தை முடித்துவிட்டு கடிதத்தை தாயிடம் கொடுத்தான். அவள் அந்தக்கடிதத்தை கொடுப்பதற்காக பத்திரமாக வைத்தாள்.

வானத்தில் கிபிர் விமானங்கள் சுற்றிக்கொண்டிருந்தன. தூரத்தில் குண்டுச்சத்தங்களும் கேட்டன. நிருபன் வெளியில் நின்று விமானங்களைப் பார்த்தான். கடலில் சண்டை நடப்பதாக தெருவில் கதைத்தார்கள். சண்டையில் இழப்புக்கள் கூடினால் விமானங்கள் குடிமனைகளைத் தாக்கும். அவள் பத்திரிகைகளைப் பார்த்து செய்திகளை அறியமாட்டாள். வானொலியில் சொல்லும் செய்திகளைக்கேட்டு நாட்டு நடப்புக்களை அறிவாள்.

அவள் வெளியில் போய் நின்றாள். உடல் வழமையை விட பதறிக்கொண்டிருந்தது. உத்தமனின் வீரச்சாவுக்குப்பிறகு அவள் ஏதும் துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்டால் தாங்கிக் கொள்ளமாட்டாள்.

"பூங்கொடியக்கா…"

திரும்பிப் பார்த்தாள். ஒரு சிவலை சிரித்தான்

"என்னைத் தெரியேலையே… நான் தான் நக்கீரன்"

"அட கிளினர் தெய்வேந்திரத்தின்ர…?"

அவன் ஓமென்றதும் அவளுக்கு சந்தோசமாக இருந்தது. அவள் வன்னிக்கு வர தெய்வேந்திரம் வரவில்லை என்று சொன்னான். ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் வெளிக்கிட தாங்கள் தனிமைப்பட்டதால்தான் வந்ததென்று நக்கீரன் சொன்னான். பூநகரியில் இருப்பதாகவும் கனகம் விசுவமடுவில் இருப்பதாகவும் சொன்னான். ஊரில் எவருமில்லை என்று நினைக்க அவளுக்கு கவலையாக இருந்தது.

"மரியதாஸண்ணயின்ரை செத்தவீட்டுக்கு ஏன் வரேலை?"

மரியதாஸ் செத்ததென்றதும் அவள் கலங்கிப்போனாள். மரியதாஸ் பூநகரியில் இருந்து குடும்பமாக தீவுக்குப்போக நேவி, வள்ளத்துக்கு கலிபரால் அடித்து மரியதாஸின் 'பொடி' கௌதாரிமுனைக்கரையில் மிதந்தது என்றும், 'பொடியை' தாங்கள் வீட்டில் வைத்து கொண்டாடியதாகவும் சொன்னான். அவள் அந்தோனி செத்ததுக்கு கவலைப்பட்டது போல மரியதாஸ் செத்ததுக்கு கவலைப்படவில்லை. குடும்பமாகச் செத்ததை நினைத்து இரங்கினாள்.

நக்கீரனை உள்ளே கூட்டிவந்து ரீ வைத்துக் கொடுத்தாள். நித்தி வருவான் என அவனுக்கு வாங்கிய மாவை நக்கீரனுக்கு ஆத்திக் கொடுத்தாள். நக்கீரனோடுதான் நித்தி படித்தான். பள்ளிக்கூடம் என்று சொல்லி வெளிக்கிட்டு பள்ளிக்கூடம் போகாமல் இயக்கத்தின் நோட்டீஸ் கொடுக்கப் போவார்கள். வீரச்சாவு என்றால் துயிலுமில்லம் போவார்கள். கந்தவிக்கிழவன் எவ்வளவோ சொல்லியும் நித்தி கேட்கவில்லை. இந்தியப் படைகள் இருந்த காலம் நெல்லியடி நகரத்துக்குள் நுழைவில் மூன்று நான்கு சோதனைச்சாவடிகள் தாண்டவேணும். சுற்றிவளைத்து பிடித்துக் கொண்டு போகிறவர்களை தடுத்து வைத்து சித்திரவதை செய்யும் முகாமும் அதுதான். யாரைப்பிடித்தாலும்

"ஐயன் எங்கை?"

என்று கேட்பார்கள். வீதிகளில் ஆமி போனால் அவர்களுக்குச் சுட்டுப்போட்டு ஐயன் புகையிலைக் கன்றுகளுக்குள்ளால் ஓடி மறைந்திடுவான். சுருளி சின்ன வண்டு. கரவெட்டியில் சுருளியை சீக்கியர் சுட்டுப்போட்டு அம்பன் ஆஸ்பத்திரி றோட்டால் ஜீப்பில் கட்டி இழுத்துக் கொண்டுபோனார்கள். ஐயனைப் பிடித்தால் ஐயனுக்கும் இப்படித்தான் என்று இந்திக்காரன் சொன்னான். அப்ப இந்திய ஆமிகளை விட ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்குத்தான் சனங்கள் பயம். கண்டபாட்டுக்கு பொடியளைப் பிடிப்பார்கள். பிடிப்பவர்களை அசோஹா கோட்டலுக்கு கொண்டு போவார்கள். சிலரை றெயினிங் கொடுத்து தங்களோடு வைத்திருப்பார்கள். மறுப்பவர்களை சுட்டுப் புதைத்தார்கள்.

ஐயன், நித்தியிடமும் நக்கீரனிடமும் நோட்டீசை கொடுத்து விடுவான். நெல்லியடி பஸ் நிலையத்துள் நோட்டீசை மெதுவாக எடுத்து கீழே வைத்து விட்டு பஸ்ஸில் ஏறிவிடுவார்கள். காற்றுக்கு நோட்டீஸ் எல்லா இடமும் பறக்கும். எல்.ரி.ரி.ஈ வந்திடுத்து என்று வீதிகள் எங்கும் குவிந்து சோதனை செய்வார்கள். எப்படி உள்ளே நோட்டீஸ் வந்ததென்று சோதனைச்சாவடிகளில் சோதனைகளை கூட்டுவார்கள்.

நக்கீரனும் நித்தியும் நான்கு நாள் பள்ளிக்கூடப் பைக்குள் கைக்குண்டுகளுடன் நெல்லியடிக்குள் நுழைந்தார்கள். கைக்குண்டுடன் முதல் நாள் போன நித்தி சங்குண்ணி கடையில் ரீ குடித்துக்கொண்டு இருக்க, பக்கத்து லக்சுமித் தியேட்டரில் இராணுவத்தினர் நின்றனர். நித்தி வடையை ஒரு கையால் கடித்துக்கொண்டு மறுகையால் பையில் இருந்து குண்டைத் தூக்கினான். அங்குமிங்கும் பார்த்தான். எவரும் கடையில் இல்லை. ரீ பரிமாறுபவன் உள்ளே போனான். முதலாளி பட்டறையில் இருந்தார். லிவரை அமத்திப்பிடித்தபடி பற்களால் கிளிப்பை இழுத்து விட்டு யன்னலால் குண்டை எறிந்தான்.

"டமார்.."

குண்டுச்சத்தத்தோடு துப்பாக்கியும் சடசடத்தது. சனங்கள் அல்லோலப்பட்டு சிதறி ஓடினார்கள். இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு தியேட்டருக்கு வந்தனர். சனங்களில் சன்னங்கள் பாய்ந்தன. உள்ளிருந்த சனங்களை மறித்து பொயின்ற்களில் சோதனை செய்து துவக்குப் பட்டால் அடித்தும் இடித்தும் பிடித்தும் சிலரை கலைத்துக் கொண்டுமிருந்தனர். இராணுவ அம்புலன்ஸ் வாகனம் கூவிக்கொண்டு வந்து காயப்பட்டவர்களை ஏற்றியது. கடைக்குள் இராணுவத்தினர் நுழைந்து எல்லா இடமும் தேடினர். நித்தி புத்தகப்பையை எடுத்துக்கொண்டு பஸ் நிலையத்துக்குப் பதறிக்கொண்டு போனான். அவர்களுக்கு குண்டு எங்கிருந்து வந்ததென்று தெரியாது. கடை, கூரைகள் எல்லா இடங்களும் தேடினார்கள். நித்தி எந்தச் சோதனைகளுமின்றி வீட்டுக்கு வந்தான். அடுத்தநாள் நக்கீரன் பள்ளிக்கூட பைக்குள் குண்டோடு போனான். ஒவ்வொரு நாளும் மாறி மாறி போய் நான்கு குண்டுகளையும் வெடிக்க வைத்தார்கள். இப்படியே எல்லா இடங்களும் குண்டுகள் வெடிக்க வெடிக்க இராணுவத்தினர் திகைத்தனர். குண்டுதாரிகள் எவரையும் அவர்களால் பிடிக்க முடியவில்லை. வல்வெட்டித்துறை சந்தைக்குப்பக்கத்தில் நித்தி இராணுவ வாகனம் மீது குண்டொன்றை எறிந்துவிட்டு தப்பிவர குண்டுகாரரை பிடிக்க முடியாமல் ஊரைச்சுற்றி வளைத்து பிடிப்பவர்களை வல்வெட்டித்துறைச் சந்திக்கு கொண்டு வந்தார்கள். சந்தியில் எல்லோரையும் இருக்க வைத்து சுட்டுக்கொன்றுவிட்டு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினார்கள். அவர்களால் குண்டுகள் வெடிப்பதை தடுக்கமுடியாது கொஞ்ச நாட்களில் நாட்டை விட்டுப்போனார்கள்.

இதை ஒருநாள் நித்தி அவளுக்குச் சொன்னான். நக்கீரனைக் கண்டதும் நித்தி சொன்ன வியப்பூட்டும் கதைகளை நினைத்துப் பார்த்தாள். நக்கீரன் ரீயைக் குடித்துவிட்டுப் போனான் அவனைக் கண்டதும் அவளுக்குச் சந்தோசமாக இருந்தது.

இன்று சனிக்கிழமை. நிருபன் பாடசாலைக்குப் போகவில்லை. அவள் சுட்ட அப்பங்களை கனகு கடைக்குக் கொண்டு போக நிருபனும் சேர்ந்து போனான். வானத்தில் கிபிர் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இன்னும் குண்டுகள் போடவில்லை. கிபிர் சுற்றினால் நிருபன் தனிய இருக்க பயப்பிடுவான். பயந்துகொண்டே அவளோடு போனான்.

கனகு பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தார். கனகு பேப்பரில் இருக்கும் எல்லாச் செய்திகளையும் படிப்பார். கனகு அவளைக்கண்ட தும் பேப்பரை கீழே வைத்தார். சொண்டுக்குள் சிரித்தபடி அவளைப் பார்க்க அவள் பார்க்கவில்லை. கிபிர் சுற்றுவதால் அவள் பயந்தபடி வந்தாள். நிருபன் அவளின் சீலையைப் பிடித்துக்கொண்டு நின்றான்.

இன்று அவள் வழமையை விட அழகாக இருப்பதாக கனகுவுக்குத் தோன்றியது. அவள் எப்பவும் அழகாக இருக்கத்தான் கனகு விரும்பினார். அவளின் அழகு அவரின் உதட்டில் வந்தது. ஒரு ரீச் சுவை போலில்லாமல் ஒரு விஸ்கியின் சுவைமாதிரி இருந்தது. கீழ்ச் சொண்டை பற்களால் கடித்துக்கொண்டு, எச்சிலால் சொண்டுகளை நனைத்தபடி அவளைப் பார்த்தார். அவள் அவரைப் பார்க்காது, அப்பவாளியை உள்மேசையில் வைத்துவிட்டுவர, அவர் பேப்பரைத் தூக்கினார். பேப்பரின் இரண்டாவது பக்கத்தை புரட்டினார். அவள் பேப்பரைப் பார்த்தாள். மடித்து பின்னுக்கு விடப்பட்ட பக்கத்தில் பெரிய படம். அவளின் கண்களில் பட்டது. அவரிடமிருந்து பேப்பரைப் பறித்தாள். அவர் பேப்பரை இறுக்கி வைத்திருந்ததால் மூன்றாவது பக்கம் கிழிந்து துண்டாய் அவரின் கையில் இருந்தது. பேப்பரில் இருந்த அந்தப் படத்தைப்பார்த்து கீழே இருந்த எழுத்துக்களை வாசித்தாள்.

"கடற்கரும்புலி மேஜர் ஈழவன்."

என இருந்தது. படத்தை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு

"என்ரை புள்ளை…"

எனக் கத்தினாள். நிருபன் தாயிடம் பேப்பரைப்பறித்துப் பார்த்து விட்டுச் சொன்னான்.

"அம்மா இந்தண்ணாதான் எனக்கு சைக்கிளாலை அடிச்சிட்டு ரொபி வாங்கித்தந்தவர்"

*(வருவாள்)*

---

சூரியனைப் பார்க்கையில் கண்ணில் ஒரு கூச்சம் – இப்பொழுது
இலங்கையில் உதயம் காணும் சூரியனுக்கே ஒரு கூச்சம்


அரியணையில் அரசனும் சரி இல்லை
வயிற்றரணை அணைக்க அரிசியும் இல்லை:..

நம் மண்ணில் மண்ணெண்ணெய்க்காகவும்
ரிவாயுக்காகவும் நாட்டு மக்கள் நடுத்தெருவில்

## கறைபடிந்த சால்வையின் சாபம்

வளம் நிறைந்த நாட்டில் கடன் நிரம்பி உள்ளது
பஞ்சம் தந்த பஞ்சபாண்டவரே வெளியேறு


எழுப்பும் கோசத்தில் ஒரு வேசம் இல்லை
வருங்கால சந்ததி அனுபவிக்க இது தோசமும் இல்லை



லோ.கம்சனா, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 89




அனுப்புபவர் பெயர்:..............................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................

கையொப்பம்:..............................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இந்தியாவின் ஆழப்படுத்தல் திட்டத்தில் இதுவும் ஒன்று சர்ச்சையில் உள்ளது. 7.கீறுதல் 8. சோதிடத்தில் இது பன்னிரண்டு 9. சரஸ்வதி 12. பிரணவம் 13. கூட்டல் குறி 14. இந்தியாவில் கால்ப்பணம் இது. 15. தாமரை 17. தீவிர வஞ்சகம் 19. மீளாத்துயில் கொள்ளும் இடம் 21. புதிய/நவீன/ தற்போதைய 22. திசை 23. தயாரிப்பு ஏற்பாடு

## மேலிருந்து கீழ்

1. காலையில் கூவி எழுப்பும் 2. மேன்மகன் 3. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம் 4. காடும் காடு சார்ந்த இடமும் 5. தகுதி/ திடம்/ பலம் 6. உருசித்து அனுபவி 10. ஏழு நாள்கள் 11. நான் எனும் எண்ணம் 12. வேலிக்கு இதுவா காவல்? 13. கணிதக் குறி 14. இழுக்குச் செய் 16. நெருப்பில்லாமல் வராதாம் 18. இந்த எண்ணெய் இறக்குமதியிலும் பாதிப்பே 20. சிரார்த்த நாள் 21. ஓர் உத்தரவுச் சொல்.

### சொற்சிலம்பம் போட்டி 88 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சுதந்திரம் 6. வாகு 7. கவி 8. தண் 9. சதிபதி 11. கரடி 12. மாரி 13. முடவன் 15. உன் 16. நாகம் 19. சிலம்பு 21. தின் 22. வலம்புரி

**மேலிருந்து கீழ்**

1. சுவாசம் 2.தகுதி 3. திகதி 4. ரவி 5. பண்டிதன் 8. தர 10. பட்டணம் 11. கரி 12. மான் 13. முருகன் 14. வன் 15. உடும்பு 16. அநாதி 17. காலம் 19. சில 20.புரி

**சொற்சிலம்பம் போட்டி இல.89**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

01.07.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 88 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**த.பற்றிக் அகிலன்**
நவாலி தெற்கு, மானிப்பாய்

**2 ஆம் பரிசு**
**தி.அமிர்தகௌரி**
கிளிநொச்சி

**3 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்**
கைதடி மேற்கு, கைதடி

**4 ஆம் பரிசு**
**பா.அனித்தா**
பிரதேச செயலகம், கரவெட்டி

**5 ஆம் பரிசு**
**சு.ஜெயானந்தன்**
83/16 அரசடி வீதி, யாழ்ப்பாணம்



# விலங்குகளைக் கொல்லும் வீதி விபத்துக்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

இடம்பெயரும் விலங்குகள் அடிக்கடி வாகனங்களைச் சந்திக்கின்றன.விபத்துகளில் சிக்குகின்றன. அங்கு பிரத்தியேகமாக வாழும் தேவாங்கு [ lorris ],ஊதா முகக் குரங்குகள்[ purple face leaf monkey] போன்ற விலங்குகள் அதிகமாக விபத்துகளில் சிக்கியும் வேட்டை விலங்குகளிடம் சிக்கியும் கடத்தல்காரர்களிடம் அகப்பட்டும் மரணமடைகின்றன.இந்த விலங்குகள் பெரும்பாலும் மரங்களின் உச்சிகளில் வாழும் இயல்புடையவை.தொடர்ச்சியாக மரத்துக்கு மரம் தாவி வாழும் இவை கீழே இறங்குவது கிடையாது. வீதிகள் குறுக்கிடுவதால் கீழே இறங்க வேண்டியிருப்பதால், மேற்கூறிய அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கின்றன.

இதைவிட வாகனங்களுக்கு பயந்து சில விலங்குகள் வீதிகளால் குறுக்கிடப்பட்டு தனித்தீவுகளாக விடப்படும் காடுகளுக்குள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

இதனால் அவை தமக்குள்ளே இனப்பெருக்கம் [inbreeding] செய்து வளமற்ற எச்சங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் அவை பிறப்புரிமை ரீதியாக அழிவைச் சந்திக்கின்றன. கூர்ப்புச் செயற்பாட்டில் இது பாரதூரமான விடயம்.மேலும் இந்த விலங்குகள் தாவரங்களின் வித்துப் பரம்பலுக்கும் காரணமாக இருப்பதால் குறிப்பிட்ட தாவர வகைகள் பரம்பலடையாது குறித்த இடத்தில் மட்டும் இருந்து அழிவடையும் நிலையும் ஏற்படுகிறது.

பெரும்பாலான விலங்குகள் காடுகளைக் குறுக்கிடும் வீதிகளில் செல்லும் வாகனங்களுக்கு பயந்து பகலில் நடமாடுவது கிடையாது. இரவில் பயணிக்கின்றன.எனினும் பொதுவாக இரவில் செல்லும் வாகனங்கள் அதி வேகமாகவே பயணிப்பதால் அவற்றுடன் அதிகம் மோதுகின்றன.அதிக விபத்துகள் இரவிலேயே நடைபெறுகின்றன.

வாகனங்களின் சத்தத்தாலும் ,கண்ணைக் கூசச் செய்யும் அதிக வெளிச்சத்தாலும் குழப்பமடைந்து நடு வீதியிலேயே விலங்குகள் நின்றுவிடுகின்றன.இதனால் அதிகம் மரணமடைகின்றன. ஏ9 வீதியில் சாதாரணமாக தினமும் காலையில் ஏராளமான விலங்குகள் அடிபட்டு காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அதிவேக நெடுஞ்சாலைகளில் நடுவே இடப்படும் உயர்ந்த சுவர்கள் காரணமாக வீதியை கடக்க முடியாத பாம்புகள் போன்ற ஊர்வனவும் சிறிய விலங்குகளும் விபத்துகளில் சிக்குகின்றன.காடுகளை குறுக்கிடும் வாகனங்களில் செல்லும் பயணிகள் தமது உணவுப் பொதிகளை வீசிச் செல்வதால் அவற்றை உண்ண வரும் விலங்குகள் வாகனங்களில் சிக்கிக் கொள்கின்றன.இதை விட காடுகளின் நடுவே திடீர் திடீர் என முளைத்துள்ள தேநீர்க்கடைகள் போன்றவைகளும் விலங்குகளைக் கவர்ந்து அவற்றை விபத்துகளுக்குள் சிக்கச் செய்கின்றன.மேலும் காட்டுத் தீ ஏற்படவும் அந்தக் கடைகள் காரணமாக அமைகின்றன.

இவை எல்லாவற்றையும் விட அண்மைக் காலமாக யானை போன்ற பேருயிர்கள் புகையிரதங்களில் அடிபட்டு மரணிக்கின்றன. பெரும்பாலும் குட்டிகள் விபத்தில் சிக்கிக் கொள்ளும் போது அவற்றைக் காப்பாற்ற நினைத்து பெரிய விலங்குகளும் விபத்தில் சிக்குகின்றன. புகையிரதத்தின் பிரமாண்டமும் சத்தமும் யானைகளைக் கலவரமடையச் செய்கின்ற படியால் இந்த நிலைமை.மேலும் யானை போன்ற விலங்குகள் சத்தத்தையும்,நிலத்தில் அதிர்வை ஏற்படுத்தியும் தொடர்பாடலை செய்கின்றன. எனினும் தார் வீதிகள், புகையிரதக் கடவைகள்



அவற்றின் தொடர்பாடலை முறித்து விடுகின்றன. எனவே அவை இரை தேடுதல்,இணை தேடுதல் போன்றவற்றில் பல சவால்களைச் சந்திக்கின்றன.மேலும் வழி தவறி மனிதக் குடியிருப்பு பகுதிகளுக்குள் சென்றுவிடுகின்றன. இதனால் மனிதனுடன் மோத வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

வீதிகளுக்கு சமாந்தரமாகச் செல்லும் மின்சாரக் கம்பிகளில் சிக்கி ஏராளமான பறவைகளும்,மர வாழ் உயிரிகளும் மரணிக்கின்றன. அத்துடன் வன விலங்கு சரணாலயங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சஃபாரி[safari] வாகனங்களினால் அடிபட்டு எத்தனையோ விலங்குகள் அழிவடைகின்றன.இலங்கையின் யால தேசிய வனப் பூங்காவில் வருடம் தோறும் மிகப் பெறுமதியான இலங்கைக்கே உரித்தான சிறுத்தைகள்,கரடிகள் என பல விலங்குகள் விபத்துக்குள்ளாகின்றன.

மரணித்த விலங்குகள் போக காயப்படும் விலங்குகளின் கதையோ இன்னும் பரிதாபகரமானது. அவயவங்கள் உடைந்து சீழ் பிடித்து, ஏற்பு வலி ஏற்பட்டு, நோய்ப்பட்டு இறக்கின்றன.விபத்துகளில் குட்டிகளை இழந்து தவிக்கும் தாய் விலங்குகளும் தாயை இழந்து தவிக்கும் குட்டிகளும் ஏராளமாக உருவாகின்றன.

இவற்றை தடுக்க நிச்சயம் வழிகள் ஏற்படவேண்டும்.வாகனச் சாரதிகள் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.முடிந்த வரை வாகனங்களின் வேகத்தை குறிப்பாக இரவில் குறைக்க வேண்டும்.தேவையற்ற சத்தத்தை எழுப்பும் கருவிகளை காட்டுப் பகுதியில் தவிர்த்தல் நல்லது.அத்துடன் விலங்குகள் அடிக்கடி வீதியை கடக்கும் இடங்களில் எச்சரிக்கை அறிவிப்புகளை இடுதல் சாலச் சிறந்தது. பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் இரவு வாகனப் பாவனையை தடுத்தல் மிகவும் பயன் தரும். வீதிகளை அமைக்கும் போது விலங்குகளின் நலனையும் கருதி வீதிகளை அமைக்கலாம். மேலும் புகையிரதப் பாதைகளில் யானைகள் சிக்குவதை தடுக்க மின்சார வேலிகளை தொடர்ச்சியாக அமைக்கலாம். விலங்குகள் விபத்துக்குள்ளாகும் முக்கிய பகுதிகள் பற்றி புகையிரத சாரதிகளுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கி புகையிரதத்தின் வேகத்தினை அந்தந்தப் பகுதிகளில் குறைக்கச் செய்யலாம். விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு அபராதம் விதிக்கும் நடைமுறையை கொண்டுவரலாம்.அண்மையில் இலங்கையில் இதனைப் பற்றி கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

காட்டு வீதிகளில் சில இடங்களில் கண்காணிப்புக் காமராக்களை வைத்து பரிசோதிக்கலாம். அங்கு போடப்படும் சட்ட விரோதக் கடைகளை தடுக்க வேண்டும்.உணவுக் கழிவுகளை வீதி ஓரங்களில் போடுவதை மக்கள் தவிர்க்க வேண்டும்.இது சில விலங்குகள் வீதிக்கு வருவதைத் தடுக்கும். முக்கியமான வீதிகள் எனின் சில உயரமான சுவர்களை வீதிகளின் அருகில் கட்டலாம்.செல்லப் பிராணிகளை வீதியில் விடுவதை தவிர்ப்பதன் மூலம் அவை விபத்தில் சிக்குவதை தடுக்கலாம். இவற்றை எல்லாம் சட்டத்தால் மட்டுமல்ல பயணிகளின் மனதில் ஏற்படும் சாதகமான விழிப்புணர்ச்சியாலுமே குறைக்க முடியும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கே செல்லும் இலங்கையின் பொருளாதாரம்?

Prof. சி.சிவேசன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என வர்ணிக்கப்படுகின்ற இலங்கை நீண்டதொரு அரசியல், சமூக, சமய, பண்பாட்டு பின்னணியினைக் கொண்ட ஒரு தீவு ஆகும். அண்மைக்காலமாக இலங்கை மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. இந்தக் கட்டுரையானது அதன் காரணங்களினை இனம் கண்டு கொள்வதுடன் அதற்கான தீர்வுகளினை முன்மொழிவதாகவுள்ளது. இலங்கையில் நாம் சமகாலத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைக்கான காரணங்களில் முதன்மையானது நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையாகும் (Political Instability). 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை இலங்கையின் அரசியலில், ஒரு ஸ்திரமற்ற நிலைமையே காணப்படுகின்றது. இதன் விளைவாக பெருமளவு மனித பௌதீக வளங்களை அபிவிருத்தி நோக்கி பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

### போருக்கே செலவு அதிகம்

நீண்டகாலமாக அடக்கப்பட்டு , ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக 1982 ஆம் ஆண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடூரமான வன்முறைகளும் அதன் நீட்சியாக உருவாகிய நீண்ட கொடிய யுத்தமும் சுமார் மூன்று தசாப்தம் வரை நீண்டது. அந்த யுத்தம் 2009 ஆம் ஆண்டு தமிழர்களுக்கான அரசியல் ரீதியான தீர்வு எதுவும் இன்றி யுத்தமானது மௌனித்தது. இந்த யுத்தத்துக்காக, இலங்கையின் பொருளாதார இயலுமையைக் காட்டிலும், மிகஅதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. யுத்த காலத்தில இருந்து இன்றுவரை நாட்டின் அரியாசானம் பல பேரினக்கட்சிகளின் வழியாக பல ஆட்சியாளர்களினைக் கண்டது. ஆனால் யுத்தம் முடிந்தும் பாதீட்டில் இராணுவ செலவினங்களுக்கான ஒதுக்கீடு இன்னமும் ஒடுங்குவதாக இல்லை.

1971 ஆம் ஆண்டு 32 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இலங்கையின் இராணுவ செலவினங்கள் அல்லது ஒதுக்கீடுகள் 2020ஆம் ஆண்டு 1574 பில்லியன் டொலராக அதிகரித்தது. ஆண்டுக்கு ஆண்டு இராணுவச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு சராசரியாக 12.79 விகிதமாக அதிகரித்து வந்துள்ளது. சமூக பொருளாதார அபிவிருத்திக்கு செலவு செய்ய வேண்டிய வளங்கள் இராணுவ மற்றும் பாதுகாப்பு செலவினங்களுக்காக தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இலங்கையில் ஒரு நிலையான, தூரநோக்கான பொருளாதாரக் கொள்கையின்மையானது , அரசாங்கங்கள் மாறுகின்றபோது ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகளின் சித்தாந்தங்களுக்கு ஏற்ப பொருளாதார அபிவிருத்தி குறித்த சிந்தனை ஓட்டங்களும் மாறுபட்டுக் கொண்டிருக்கின்றன.

### கோப்பிச் செய்கையும் நவீன பொருளாதாரமும்

இலங்கையின் நவீன பொருளாதார அபிவிருத்தியானது 1830 ஆம் ஆண்டு பெருமளவில் கோப்பிச் செய்கையில் இருந்து ஆரம்பமாகியது . 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை , கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றின் ஏற்றுமதியில் தான் இலங்கையின் பொருளாதாரம் தங்கியிருந்தது. 1913 - 1929 ஆண்டு வரையான இரண்டாம் உலகயுத்தம், 1954 - 1955 ஆண்டு வரையான கொரியன் யுத்தம் (Korean war) நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியானது அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. இதனால் பொருளாதாரத்தில் வளர்ச்சிப் போக்கு காணப்பட்டது. ஆனால் தனியார் துறையினர் உற்பத்தித் துறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களுக்கு போதுமான வசதிகளும் காணப்படவில்லை என்பதற்கும் அப்பால் அரசாங்கத்தினால் போதிய அளவு ஊக்குவிப்புகளும் வழங்கப்படவில்லை . 1957 - 1977ஆம் ஆண்டு வரை இலங்கையில் இறக்குமதி பதிலீட்டு பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக்காலப்பகுதியில் அரசாங்கம் அதிகளவு கைத்தொழில் மயமாக்கல்களில் ஈடுபட்டது. இந்தக்காலப்பகுதியில் மொத்த தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டது.

1971 - 1977 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மிகவும் இறுக்கமான, மூடிய பொருளாதாரக் (Closed Economy) கொள்கை நடைமுறையில் இருந்தது. இந்தக்காலப்பகுதியில் வெளிநாட்டு கடன் (Foreign Debt) மொத்த தேசிய உற்பத்தியில் 18.17 விகிதமாகக் காணப்பட்டது. 1977 - 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் அதிகளவில் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதாவது 1977ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை (Open Economic Policy) அறிமுகப்படுத்தியது. 1982 ஆம் ஆண்டு வரை பொருளாதார வளர்ச்சி வீதமானது சராசரியாக 6.5 விகிதமாகக் காணப்பட்டது. தெற்கு ஆசிய நாடுகளிலேயே இலங்கை முதன்முதலில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஆரம்பித்த ஒரு சில ஆண்டுகளில் வெற்றியும் கண்டது , ஆனாலும் கொடூரமான இன மோதல்களினால் திறந்த பொருளாதாரக் கொள்கையின் பலனை நாடு அனுபவிக்க முடியவில்லை.

### தேவையற்ற அபிவிருத்திகள்

இலங்கையில் விவசாயத்துறையின் பங்களிப்பானது குறைவடைந்து கைத்தொழில், சேவைத் துறையின் பங்களிப்பானது அதிகரிக்கத் தொடங்கிய போதும், கைத்தொழில் துறையிலிருந்து கிடைக்கின்ற நிகர இலாபம் (Net Profit) மிகக் குறைவாகவே கிடைத்தது. உண்மையில் இலங்கையின் 70 விகிதத்துக்கு மேற்பட்ட பகுதிகள் கிராமங்களாகவும் அங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயத்தினை ஜீவனோபாயமாகக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்ற போதும் விவசாயத்துறையின் வளர்ச்சியானது வீழ்ச்சியடைந்தே காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி (Post War Development) என்ற போர்வையில் பெருந்தெருக்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் என்பன அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இவை நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளினை கவர்ந்து இழுப்பதற்கு முதன்மையான காரணியாக அமைந்திருந்தன. ஆனாலும் எதிர்பார்த்த அளவுக்கு வெளிநாட்டு முதலீடுகள் நாட்டை, நோக்கி வரவில்லை . 2011 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி யில் 46 விகிதமாக இருந்த நேரடி முதலீடு 2021 ஆம் ஆண்டு 0.8 விகிதமாக வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கையின் பொதுக்கடன் பெறும் விகிதமானது தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. சமகாலத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் 110 விகிதமாக உள்ளது. பொதுவாக இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளிலிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்றவற்றிலும் கடன் பெறப்பட்டது. இந்த நிதிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டாலும், சில உட்கட்டுமான அபி விருத்திகள் தேவைதானா என்கிற வினா விடையின்றி தவிக்கின்றது. மேலும் சில அபிவிருத்திகளின் தேவைப்பாடுகள் குறித்த ஒரு கேள்வியும் இருக்கவே செய்கிறது. உதாரணமாக தாமரைக் கோபுரம் 400 மில்லியன் ரூபாவுக்கு அமைக்கப்பட்டது. அது வான் உயர உயர்ந்து அழகாகக் காட்சி தந்தாலும், ஒரு பொருளாதாரம் நலிந்த ஒரு நாட்டில் இவ்வாறான ஒரு முதலீடு நாட்டினை அழகுபடுத்த தேவைதானா? என ஒரு கேள்வியுண்டு.

மேலும் வெளிநாட்டிலிருந்து அந்நியச் செலாவணியினை இலங்கைக்கு கொண்டுவரும் மிக முக்கியமான மூலாதாரமாக வெளிநாட்டிலிருந்து தொழில்புரியும் இலங்கையர்கள் அனுப்பும் பணம் காணப்படுகின்றது. கொவிட் 19 வைரஸ் காரணமாக அண்மைக் காலமாக வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது. கொவிட்டுக்கு முன்னைய காலத்தில் வெளிநாட்டு வர்த்தக பற்றாக்குறையில் 80 % இவ் வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டது.



> “ இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கங்களில் பூகோள அரசியல் மாற்றங்களும் அதிகளவில் தாக்கத்தை செலுத்துகின்றன. ரஷ்யா உக்ரைன் இடையேயான யுத்தமானது உலக விநியோகச் சங்கிலியில் (World Supply Chain) பெரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

### ரஷ்யா- உக்ரைன் போரால் ஏற்பட்ட விளைவு

இலங்கை மத்திய வங்கியானது நவம்பர் 2021 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களத்தை (Foreign Remittance Facilitation Department of Central Bank of Sri Lanka) உருவாக் கியது. இதன் முதன்மையான நோக்கங்கள்: வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவதை உறுதிப்படுத்துதலும் , அனுப்புவதற்கான பொறிமுறையை வசதிப்படுத்துவதுமாகும். ஆனால் அண்மைக்காலமாக கொவிட்தொற்று, ரஷ்யா உக்ரைன் யுத்தம் போன்றவற்றினால் உலகப் பொருளாதாரம் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளதன் விளைவாக இந்த அமைப்பின் நோக்கத்தினை எய்துவதில் பிரச்சினைகள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. ஆனாலும் ஜூன் மாதத்தின் நடுப்பகுதியில் வெளிநாட்டு பணவனுப்பல்களில் கடந்த இரு மாதங்களினைவிட 35 சதவீத அதிகரிப்புக் காணப்படுவதாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் மத்திய வங்கியை மேற்கோள்காட்டி குறிப்பிட்டுள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கங்களில் பூகோள அரசியல் மாற்றங்களும் அதிகளவில் தாக்கத்தை செலுத்துகின்றன. ரஷ்யா உக்ரைன் இடையேயான யுத்தமானது உலக விநியோகச் சங்கிலியில் (World Supply Chain) பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. உதாரணமாக யுத்தத்தின் விளைவாக பெற்றோல், மண்ணெண்ணைய், டீசல் போன்றவற்றின் விநியோக மார்க்கம் இலங்கையில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் மக்கள் அலை, அலையாக எரிபொருள் நிராப்பு நிலையங்கள் முன்னே வீதியோரமாக வரிசைகளில் காத்திருக்கிறர்கள். மறுபுறம் டொலரின் பெறுமதி அதிகரிப்பின் விளைவாக , பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் வானில் ஏவப்பட்ட விண்கலம் போல் வேகமாக ஏறுகின்றன; ஏறிக்கொண்டேபோகின்றன.

### இரசாயன உரத்தடையும் நெல் உற்பத்தியின் வீழ்ச்சியும்

நெல் உற்பத்தியானது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்கிறது . குறிப்பாக 2021 ஆம் ஆண்டு இலங்கை அரசு விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி போன்றவற்றின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்தியதன் விளைவாக உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

மேலும் அண்மைக்காலமாக இலங்கையில் கோதுமை மாவின் பயன்பாடு மிகவும் அதிகரித்து காணப்படுவதுடன் அதன் விலையும் மிகவேகமாக அதிகரித்தவாறேயுள்ளது. உலகளாவிய ரீதியில் கோதுமை மாவுக்கான கேள்வியும் அதிகரித்தபடியே உள்ளது. இதற்கு முக்கிய காரணியாக ரஷ்யா உக்ரைன் இடையேயான யுத்தத்தினைக் குறிப்பிடலாம். இந்த யுத்தமானது சர்வதேச ரீதியில் கோதுமை மாவின் விநியோகத்தில் தொடர்ச்சியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

தற்போது உலகில் எந்த ஒரு நாடும் முழுமையாக இயற்கை பசளைகளினை மட்டுமே பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. நவீன யுகத்தில் ஆஸ்திரேலியாவில் 2020 ஆம் ஆண்டில் இருந்து கிட்டத்தட்ட 35.69 மில்லியன் ஹெக்ரெயர் நிலம் (Hectares of land) இயற்கை விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை கடந்த இருதசாப்தங்களாக விவசாயத்துறையானது மிகப்பெரிய சவால்களினைச் சந்தித்து வருகின்ற நிலையில், இவ்வாறான முடிவானது இலங்கையின் ஒட்டு மொத்த விவசாயத்துறையின் நிலைபேண்தன்மை குறித்த கேள்வியினை ஏற்படுத்தியுள்ளது .2021 ஆம் ஆண்டு நெல் அறுவடையானது மிகவும் குறைவடைந்தது. இதன் விளைவாக அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, கோதுமையின் இறக்குமதியும் அதிகரித்திருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேர்ட் கதை



○ கோகுலராகவன்

சேர்ட் எமது கலாசார உடை இல்லை. அதனால் முன்னரெல்லாம் மக்கள் அயன வலய நாடுகளில் வெறும் மேலோடுதான் திரிவதுதான் வழமை .

ராஜராஜ சோழன் கூட சுவரோவியத்தில் வெறும் மேலோடுதான் கருவூர்தேவரோடு இருப்பதாக வரையப்பட்டுள்ளார். காலனித்துவ காலத்தில்தான் ஆண்கள் சேர்ட் அணியப் பழகி இருக்க வேண்டும். நான் அறிய, அம்மா வழிப் பேரன் சந்தைக்கு போகும்போது சேர்ட் போட மாட்டார்.ஏதும் விசேடத்துக்கு மட்டும் போடுவார். ஆகவே அவருக்கு இரண்டு, மூன்று சேர்ட் போதுமானது.

அவசரத்தில் சேர்ட் போடாமல் புறப்பட்டுப் போனவர்களும் உண்டு. யாராவது பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டால்,

"தம்பி கொக்காக்கு வயித்துக்க குத்துதாம், கார் பிடிச்சுக் கொண்டு வா" என்றவுடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடுவார்கள் , சேர்ட் போட மறந்து விடுவார்கள்.

"எடேய் சேட்டுப் போடாமல் போறான்" என்று ஆரும் ஒருத்தர் சேர்ட்டை எடுத்துக் கொண்டு பின்னால் ஓடுவார். ஆகவே சேர்ட், நம்மோடு ஒட்டாத ஒன்றுதான். ஆனால் ஒட்டி விட்டது.

கோயிலுக்குள்ளும் சேர்ட்டோடு போகும் அளவுக்கு வந்து விட்டது. கோயில்காரர், "மேலாடையுடன் உள்ளே நுழைய வேண்டாம்" என அறிவிப்பு பலகை வைக்குமளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

சேர்ட்டைப் போல இருக்கும் 'நஷனல்' என்பதை ஒப்பீட்டளவில் பலரும் நம் கலாசார ஆடையாக நினைக்கிறார்கள். "நஷனல்" என்பதன் பெயரிலேயே சந்தேகம் உள்ளது.

ஏன் அது ஆங்கிலப் பெயரால் அழைக்கப்படுகின்றது? தமிழ்ப்பெயர் ஏன் கிடையாது? ஆனால் அது ஆங்கிலேயரால் அணியப்பட்ட ஆடையாகவும் இல்லை . 1956 களில் இலங்கைக்கான தேசிய உடையாக எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவால் அறிமுகம் செய்யப்பட்டதுதான் இந்த நஷனல். இதற்கென ஒருகுழு நியமிக்கப்பட்டு நஷனல் உருவாக்கப்பட்டது. இந்த நஷனல் ஆடையினை பொதுவாக தமிழரும் ,சிங்களவரும் அணிகிறார்கள்.




அது சரி, ஏன் இந்த சேர்ட் கதை?

பெண்களுக்கு சேலை போல, சேர்ட் மீதான காதல் ஆண்களுக்கு மிக அதிகம். சேர்ட் சும்மா போடமாட்டார்கள், அயன் பண்ணி போடுபவர்களே அதிகம்.

எனக்கும் சின்ன வயதில் இருந்தே சேர்ட் மீதான விருப்பம் அதிகம்.

எங்களுக்கு ஒரு புது சேர்ட்டும் புதுக்காற்சட்டையும் , அறத்தி அம்மன் வைகாசிப் பொங்கலுக்கு வீட்டில் வாங்கி தருவார்கள். அடுத்த வருடம் பொங்கல் வரும்வரை அதுதான் எங்களுக்கு புதுக்காற்சட்டை, சேர்ட். அந்த காலகட்டத்தில் றெடிமேட் சேர்ட் எல்லாம் கிடையாது. தைப்பிக்க வேண்டியதுதான் ஒரேவழி . அம்மா பளையிலிருந்து சாவகச்சேரிக்கு சேர்ட் தைப்பிக்க வருவார். அப்போது சாவகச்சேரியில் 'முத்து ரெயிலறிங்' பிரபல்யம். அதற்கு பிறகு 1990 ஆம் ஆண்டளவில் "றெடிமேட் "சேர்ட்கள் வரத் தொடங்கின. மார்ட்டின் சேர்ட் மிகபிரபல்யம். அலுவலகத்துக்கு அணியக்கூடிய வண்ணங்களில் கிடைக்கும்.மார்ட்டின் சேர்ட் போட்டுக் கொண்டு ரியூசனுக்கு போனால் அன்றைக்கு விலாசம்தான்.

"என்ன விலையடா"?

"எங்க வாங்கினனீ?"

அன்று ஹீரோ தான்.

ரியூசன் பெட்டைகள் பார்க்கிறார்களா?எனக் கடைக்கண் நோட்டம் வேறு. ஆனால் அண்ணன் நித்திரையில் கிடக்கேக்க, அவனது மார்ட்டின் சேர்ட்டை களவாக போட்டுக்கொண்டு வந்தது, எனக்கு மட்டும்தானே தெரியும்.. 2000 களில் எமரல்ட் சேர்ட் பிரபல்யம் அடையத் தொடங்கியது. எனக்கு அதில் தனி விருப்பம் .

2004 இல் ஒரு தடவை எமரல்ட் சேர்ட் வாங்கப் போனேன். அப்பவே விலை ரண்டாயிரம் என்றார்கள்.எனது வரவு செலவு திட்டத்துக்கு அது கட்டுப்படியாகாது. விட்டிட்டு வந்து விட்டேன்.

ஒருவருடத்துக்கு முன்னர், வெளிநாட்டில் இருந்து வந்த மாமா முறையான ஒருவர் சேர்ட் ஒன்றைத் தந்திருந்தார்.

ஒருநாள் அதைத்தான் பள்ளிக்கூடம் போட்டுக்கொண்டு போய் இருந்தேன். அன்று மாலை , அதை துவைக்கும் போதுதான் பார்த்தேன் அது எமரல்ட் சேட். அது எனக்கு தரப்பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டது.

இரண்டு கவலைகள் மனதில் தோன்றின.

ஒன்று: எனது அவதானிப்பு திறன் குறைவடைந்து வருகின்றது.

இரண்டு: ஒரு வருடமாக என்னிடம் ஒரு எமரல்ட் சேட் இருப்பதை அறியாமல் போனது.

(கதைப்பம்)




# ஏன் இந்த எதிர்ப்பு?

○ ந.பரமேஸ்வரன்

இந்தியாவின் முன்னணி வர்த்தகரும் , உலகின் முதல் பத்து பணக்காரர்கள் வரிசையில் எட்டாவது இடத்தில் உள்ளவரும், இந்தியப்பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமானவருமான கௌதம் அதானிக்குச் சொந்தமான 'அதானி குழுமம்' மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தியில் ஈடுபடவுள்ளது. ஐம்பது நாடுகளில் 200 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்துள்ள அதானி நிறுவனம் இலங்கையிலும் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தியில் இறங்கவுள்ளது. ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை அதானி குழுமம் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்யவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதன் முதற்கட்டமாக 150 மில்லியன் அமெரிக்க டொலரை அதானி குழுமம் முதலீடு செய்யவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் திருகோணமலை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் மன்னாருக்கான போக்குவரத்து வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அத்துடன் மன்னாரை அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் சமகாலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. எனினும் இந்தக் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் காரணமாக வங்காலையில் உள்ள பறவைகள் சரணாலயத்துக்கு பறவைகள் வருகை தருவது தடுக்கப்படும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சிலர் கூறுகின்றனர். 'வங்காலை பறவைகள் சரணாலயம்' இந்தக் காற்றாலை மின் உற்பத்திக் கிராமமான தம்பபன்னி கிராமத்திலிருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் 380 மில்லியன் யுனிட் தூய மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது . மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை விட பூநகரியிலும் ஒரு காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை உருவாக்க அதானி குழுமம் முயற்சி எடுத்து வருகின்றது.

2018 ஆம் ஆண்டு இலங்கையில் 1793 மெகாவாட் நீர் மின்சாரமும்,1137 மெகாவாட் எரிசக்தி மூலமான மின்சாரமும், 900 மெகாவாட் அனல் மின்சாரமும் இதர மின் உற்பத்திகளுமாக மொத்தம் 4046 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே மன்னாரிலும் பூநகரியிலும் தலா 1000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியுமென அதானி குழுமம் கூறுகின்றது. மன்னாரிலும் பூநகரியிலும் தலா 1000 மெகாவாட் மின்சாரத்தை அதானி குழுமம் உற்பத்தி செய்யும் பட்சத்தில் மின்வெட்டு என்ற பேச்சுக்கே இங்கு இடமிருக்காது.

ஏற்கனவே நெடுந்தீவு,அனலைதீவு ,நயினாதீவு போன்ற தீவுகளில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை சீனாவுக்கு வழங்க முற்பட்ட போது இந்தியா அதை தடுத்து நிறுத்தியிருந்தமை உலகறிந்த இரகசியம். சீனத் தூதரகம் கூட தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மூன்றாவது சக்தி (Third party) ஒன்றின் அழுத்தம் காரணமாகவே சீனாவுக்கு வழங்கப்படவிருந்த அந்தத் திட்டம் இரத்துசெய்யப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தது.

சீனா 12 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவிருந்ததாகவும் ,ஆனால் அதானி குழுமம் 75% மானிய அடிப்படையில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் பிரதியமைச்சர் துமிந்த திஸநாயக்கா தெரிவித்திருந்தார்.

கடந்த 16 ஆம் திகதி மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து , 'கோத்தா கோ கம' போராட்டக்காரர்கள் இந்தியத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதான விடயமாக அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்ட திட்டத்தில் வெளிப்படைத்தன்மை பேணப்[illegible] முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அதானி குழுமத்துக்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி தன்னை வற்புறுத்தினாரென ஜனாதிபதி கோத்தாபய கூறினார் என்று மின்சார சபைத் தலைவர் கோப் குழுவுக்கு முன்னால் வாக்குமூலமளித்திருந்தமையும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கான அடிப்படைக்காரணங்களுள் ஒன்று. 'தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்நிய முதலீடுகளை வரவேற்கிறோம் . ஆனால் அதானி எமக்கு வேண்டாம்' என ஆர்ப்பாட்டக்காரர்களுள் ஒருவர் 'Econmy Next'என்ற இணையத்தளத்துக்கு தெரிவித்துள்ளார்.

'அதானி நரகத்துக்குப் போ' என்ற சுலோக அட்டையும் (Adani go to hell) ஆர்ப்பாட்டக் களத்தில் காணப்பட்டது. இருளில் மூழ்கியுள்ள சிறிலங்காவுக்கு ஒளியூட்ட முற்பட்டால் நரகத்துக்குத்தான் செல்ல வேண்டும் போலிருக்கிறது. மோடி தனது செல்லப்பிள்ளை கோத்தாவின் ஊடாக பின் கதவால் இலங்கைக்குள் நுழையப்பார்க்கிறாரா ? என எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வியெழுப்பியுள்ளது. ஜே.வி.பி.யின் களுத்துறை மாவட்ட அமைப்பாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ , 'வெளிநாடுகளுக்கு எமது சொத்துக்களை விற்பனை செய்வது நிறுத்தப்பட வேண்டும் 'எனக் கூறியுள்ளார்.

காற்றாலை மின் திட்டத்தால் சுற்றுச்சூழல் மாசடையும் என்பதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைத்த கோஷங்களுள் ஒன்று. ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் சூழல் மாசடைவது வெகுவாகக் குறைக்கப்படும் என மின்சார சபை தெரிவிக்கிறது.இதே திட்டத்தை எரிசக்தி மூலம் உற்பத்தி செய்கையில் ஆண்டொன்றுக்கு 2.85.000 மெற்றிக் தோன் காபனீரொட்சைட் வெளிவிடப்படும் எனவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது. ஆனால் காற்றாலை மின் உற்பத்தியில் துளியளவு கூட காபனீரொட்சைட் வெளியேறுவதில்லை. அப்படியானால், உண்மையில் இப்போதிருக்கும் மின் உற்பத்தி முறைமைகளை விடவும், காற்றாலை மின் உற்பத்தியே சூழலுக்கு மிக இசைவானது.அப்படியான சூழலோடு இணக்கமான திட்டத்தை எதிரணிகள் ஏன் எதிர்க்கின்றன? ராஜபக்ச குடும்பத்தினர் சீனாவுக்கு எல்லாவற்றையும் விற்பனை செய்த போது ஜே.வி.பியோ ,ஐக்கிய மக்கள் சக்தியோ , வேறெந்த அமைப்புகளோ எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

'இப்போது நாங்கள் இருட்டினுள் வாழ்ந்தாலும் பரவாயில்லை .மின்சாரத்தடை காரணமாக தொழில்களை இழந்தாலோ உற்பத்திகள் பாதிக்கப்பட்டாலோ பிரச்சினையில்லை. ஆனால் இந்தியா மட்டும் வரக்கூடாது' என்பதே சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடு. காரணம், இந்தியா அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வலியுறுத்துவதுதான்.

அதானி குழுமத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்தின் கரங்களும் இருப்பதாக, தென்னிலங்கை ஊடகவியாலாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். இதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. தம்பபன்னி கிராமம் இந்துக்கள் செறிந்து வாழும் தலைமன்னார் பகுதியிலேயே அமைந்துள்ளது. அதானி குழுமம் மன்னாரில் காலூன்றும் பட்சத்தில் பாரதிய ஜனதாக்கட்சியின் செல்வாக்கு இந்த பிரதேசத்தில் அதிகரிக்கும் . இதனால் படிப்படியாக மன்னாரில் இந்துக்களின் செல்வாக்கு அதிகரிக்கும் என்ற அச்சமே கிறிஸ்தவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமைக்கு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
26 ஜூன் 2022

# ஊர்ப்புதினம்

இராகவன்

எங்கட இளையண்ணா படம் கீறுறதிலயும் சோடனை வேலையளிலயும் விண்ணன் எண்டு முதலே சொன்னனான். அவன் இன்னொரு விசயத்திலயும் விண்ணன். அதுதான் பட்டம் கட்டுறது. அவன் எப்பவும் வழமையா படலம் பட்டந்தான் கட்டுவான். மார்கழி மாதம் முடியேக்குள்ளயே அவன் பட்டங்கட்டுறதுக்கான ஏற்பாடுகளைத் தொடங்கியிடுவான். இப்பவெல்லோ எல்லோரும் வீட்டுக்குச் சுத்திவர மதில் கட்டியிருக்கினம். முந்தி அநேகமா எல்லோரும் வீட்டைச் சுத்தி வேலி தானே அடைக்கிறவை. அந்த வேலியடைப்பிலும் நாலு வகையிருக்கு. வெறுங்காணியளுக்கெண்டால் சிலிப்பர் கட்டைபோட்டு நாலுவரியில முள்ளுக்கம்பி வேலியடைப்பினம்.

சிலர் சிலிப்பர்கட்டைக்குப் பதிலா கல்தூண் அல்லாட்டிக் குத்துக்கால் பாவிப்பினம். வீட்டைச் சுத்தி வேலியடைக்கிறதெண்டால் சிலர் தனிக்கிடுகால அடைப்பினம். இதை யாழ்ப்பாணத்தின்ர பாரம்பரியம் எண்டும் சொல்லுவினம். எங்கட செங்கையாழியான் 'கிடுகுவேலி' எண்டொரு பேமஸான கதையே எழுதியிருக்கிறார்.

அடுத்தது சில ஆக்கள் காவோலை மட்டையளை வட்டுறுப்பாய் வெட்டி மேலுங்கீழும் அடுக்கடுக்கா வைச்சு, கட்டுக்கம்பியால இறுக்கமா வரிஞ்சுபோட்டு, மேற்பக்கத்துக்குக் கிடுகு கட்டி, வரிச்சுப் பிடிச்சிருப்பினம். மற்றது அலம்பல்வேலி.

அலம்பலை நல்ல நெருக்கமாக் குத்தி மட்டைவேலி மாதிரி இங்கயும் மேலுக்குக் கிடுகுகட்டி வரிச்சுப்பிடிச்சிருப்பினம். இந்த வேலியளில எங்க இளையண்ணனுக்குப் பிடிச்சது கிடுகுவேலியும் அலம்பல்வேலியும்தான். அந்த இரண்டு வேலியளுக்கும் வரிச்சுப் பிடிக்கிற அயிற்றத்தைத் தான் அவன் 'எய்ம்' பண்ணுவான். அநேகமா அந்தவேலியளுக்கு வரிச்சுப் பிடிக்கேக்குள்ள கமுகஞ் சிலாகையளத்தான் பாவிக்கிறவை.




**இளையண்ணா அங்கையுமிங்கையும் போய் வரேக்குள்ள எந்தெந்த வேலியளுக்குக் கமுகஞ் சிலாகையளால வரிச்சுப் பிடிச்சிருக்கெண்டு 'டிற்ரெயிலா' றெக்கி எடுத்து வைச்சிருப்பான்.**

இளையண்ணா அங்கையுமிங்கையும் போய் வரேக்குள்ள எந்தெந்த வேலியளுக்குக் கமுகஞ் சிலாகையளால வரிச்சுப் பிடிச்சிருக்கெண்டு 'டிற்ரெயிலா' றெக்கி எடுத்து வைச்சிருப்பான். பட்டங்கட்டுற ஏற்பாடுகள் தொடங்கின உடனை என்னையுங் கூட்டிக் கொண்டு கைக்குள்ள ஒரு புது பிளேட்டோட வெளிக்கிடுவான். அவனுக்கு வசதியான வேலியில சத்தம் சலாரில்லாமல் இரண்டு கமுகஞ் சிலாகையள வெட்டியெடுத்துக் கொண்டு வருவம்.

பிறகு ஒரு நாள்முழுக்க இருந்து மினக்கெட்டு அந்தக் கமுகஞ்சிலாகையளைக் கத்தியால செப்பமாச் சீவி, அளந்துவெட்டி ,தன்ர உயரத்துக்கு ஒரு படலம் பட்டங்கட்டியிடுவான்.

அடுத்தது விண் இணக்கிற வேலை. அதுக்கெண்டொரு நீட்டுக் கமுகஞ்சிலாகையைச் சீவி, உரப்பையில நல்லதாப் பாத்து இரண்டு நாரிழுத்து, முள்முருக்கஞ் செத்தல்ல ஒரே அளவா இரண்டு கூவைக்கட்டையளை வெட்டி, நடுவில ஓட்டை துளைச்சு, சிக்ரெட் பெட்டிக்குள்ள வாற ஈயத்தாளை எடுத்து பொட்டுக்கடலைச் சைசுக்குச் சுருட்டி , அந்தக் கூவைக்கட்டை ஓட்டைக்குள்ள அடைஞ்சிட்டு, உரப்பை நாணை சரியான றேஞ்சில விட்டுப் பொருத்தி இழுத்துக் கொண்டு வந்து, அடுத்த கூவைக்கட்டைக்குள்ள பிற்பண்ணிப்போட்டு, கையில வைச்சு ஒரு சுழட்டுச் சுழட்டுவான். 'சொய்ங், நைய்ங்' எண்டு ஒரு நாதம் பேசும்.

அடுத்த ஸ்ரெப் பட்டமொட்டுறது. அதுக்கு அவன் வெள்ளை, கடும்நீலம், கடுஞ்சிவப்பில ரிஸ்யூப் பேப்பர் வேண்டியந்து பச்சைக்கோதுமை மாவை ஒரு சிரட்டையில எடுத்துச் சுடுதண்ணிவிட்டுக் கிண்டி பசை தயாரிச்ச கையோட முதல்ல வெள்ளை ரிஸ்யூவை எடுத்துக் கட்டிவைச்ச பட்டத்தைக் கவர் பண்ணி வலுநீற்றா ஒட்டுவான்.

பிறகு கடும் நீலம், கடுஞ்சிவப்பு ரிஸ்யூக்களை சமமா மடிச்சுச் செங்கோணமுக் கோணங்களா வெட்டியெடுத்து, வெள்ளை ரிஸ்யூவுக்கு மேலை சிவப்பு, நீலம் எண்டு ஒண்டவிட்டொண்டா மாத்தி மாத்தி ஒட்டுவான். அது முடிய வடிவா விண்கட்டி நைலோன் நூலெடுத்து ஏறுமுச்சை , வால்முச்சை இரண்டும் நல்ல அளவாக் கட்டுவான்.

அதுக்கு மூண்டுபட்டு இழைக்கயித்தில நீளமான வால் கட்டுவான். தைப்பொங்கலண்டு விடிஞ்சவுடன முதல் ஆளா தல்லையப்புல[illegible] முன்னால நிப்பான். அவனுக்குப் பின்னால நானும் [illegible] விடுறது ஆர். நான்தானே.

(தொடரும்)

# யாழ்ப்பாண வரலாறு

**1505–1948 வரை**

ந.பரமேஸ்வரன்

**1898 நவம்பர்**
வன்னி மாவட்டம் பிரகடனம்

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பிரதேசங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு வன்னி மாவட்டம் என்ற பெயரில் தனி மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

**1899 பெப்ரவரி 25**
அரசாங்க அதிபர் ஐவர்ஸ் (Ivers) யாழ்ப்பாணத்தில் நகரமண்டபம் ஒன்று அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

**1899 டிசெம்பர் 14**
யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஆபத்துக்குதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையை (Friend in Need Society Hospital) அரசாங்கத்திடம் கையளிப்பது எனத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. அதுவரை யாழ்ப்பாண மருத்துவமனை ஆபத்துக்குதவும் நண்பர்கள் கழக மருத்துவமனை என்றே அழைக்கப்பட்டது.

**1900 ஜனவரி 01**
1892 ஆம் ஆண்டின் சிறுநகர சுகாதாரத் திட்டத்தின் (small town ordinance)கீழ் பருத்தித்துறை உள்வாங்கப்பட்டது.

**1900 மார்ச் 24**
மருத்துவர் வில்லியம் போல் காலமானார். மானிப்பாய் கிறீன் மருத்துவமனையில் மருத்துவக்கல்வியை பூர்த்தி செய்த, போல் இந்தியாவின் பாம்பன் மருத்துவமனையில் சிறிது காலம் கடமையாற்றிய பின் யாழ்ப்பாண மருத்துவமனையிலும் கொழும்பு மருத்துவமனையிலும் சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றியுள்ளார்.
அன்னாரின் வீடு தற்போது காங்கேசன் துறை . துறைமுக பாதுகாப்பு வலயத்தினுள் கீரிமலையில் உள்ள மஹிந்தவின் மாளிகை அருகில் உள்ளது.

**1901 மார்ச் 01**
நான்காவது குடிசன மதிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது. வடமாகாண சனத் தொகை 340.936.

**1902 ஜனவரி 20**
மன்னாரில் முத்துப்படுக்கைகளை ஆராய்வதற்காக லிவர்பூல் பல்கலைக் கழக பேராசிரியர் ஹேர்ட்மன் (Herdman)மன்னாருக்கு வந்து மூன்று மாதங்கள் தங்கியிருந்து முத்துப் படுக்கைகள் பற்றியும் கடல்வளம் பற்றியும் ஆய்வு செய்தார்.

**1902 பெப்ரவரி 08**
பருத்தித்துறையில் R.W. அழகக்கோன் தலைமையில் புகையிரத சேவையை யாழ்ப்பாணம் வரை விஸ்தரிப்பது தொடர்பான கூட்டமொன்று நடைபெற்றது.

**1902 மார்ச் 11**
ஆளுநர் வெஸ்ற்றிட்ஜ்வே (West Ridge way) காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப்பாதையை திறந்து வைத்தார்.

**1902 மே**
திருவங்கூர் பிரதம நீதியரசராக கடமையாற்றியவரும் 'இந்து சாதனம்' பத்திரிகையின் ஆசிரியரும் சைவபரிபாலனசபை தலைவருமான செல்லப்பாபிள்ளை காலமானார்.

**1902 செப்ரெம்பர் 05**
சாவகச்சேரியிலிருந்து பளை வரையான 14 மைல் நீள புகையிரதப்பாதை திறந்து வைக்கப்பட்டது.

**1902 டிசெம்பர்**
வெள்ளைச் சுண்ணாம்புக்கல்லில் செதுக்கப்பட்ட புத்தர் சிலையொன்று சுன்னாகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

**1903 ஜனவரி**
மோட்டார் சைக்கிள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டது. சேர்.பொன்.இராமநாதன் அரச சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். தற்போது ஜனாதிபதி சட்டத்தரணி போன்று பிரிட்டிஷ் அரசரின் அல்லது அரசியின் சட்டத்தரணிகளாக (Kings Counsel, Queens Counsel) இவர்கள் கருதப்பட்டனர். இவர்கள் பிரிட்டிஷ் நீதிமன்றத்திலும் வழக்காடும் தகுதி பெற்றிருந்தனர். இவர்கள் தமது பெயரின் பின்னால் KC,QC என சுருக்கமாக போட்டுக்கொள்வர்.

**1903 ஒகஸ்ட்**
மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட் மீண்டும் சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

**1903 ஒக்ரோபர் 13**
உதவி அரச அதிபர் ஜே.பி.லூயிஸ் யாழ்ப்பாணத்துக்கு புகையிரத சேவையை கொண்டு வந்த ஆளுநர் றிட்ஜ்வே ஞாபகார்த்தமாக முற்றவெளியில் நினைவு மண்டபம் ஒன்று அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

*(வரலாறு நீளும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org